தேசிய தாளமேனும்

முப்பத்தைந்து

தாள தர்ப்பணம்



ஆசிரியர்,
திரு. வ. த. முனிசாமி பிள்ளை அவர்கள்.

கோவை,
சி. கு. நாராயணசாமி முதலியாரால்
பதிப்பிக்கப் பெற்றது.
1941.

விலை அணா 4.

விளம்பரம்


(லயஞான விற்பனர்களுக்குப் பெரும்
பயன் தரும் அரியதோர் நூல்)


தமிழ் மொழியில் இதுவரையும் வெளிவராதது.

"முப்பத்தைந்து தாளதர்ப்பணம்" என்ற இத் தமிழ்நூல், தெலுங்கு - தமிழ் மொழிகளில் நல்ல பாண்டித்தியமும், லட்சண-லட்சியவித்துவான் எனப் பெயர்சிறந்தவரும், தவில் வாத்தியத்தில் கோயமுத்தூர் ஜில்லாவில் பெயர் சிறந்து பெரும்புகழுடன் விளங்கிச் சமீபத்தில் காலஞ் சென்ற மகா வித்துவானுமாகிய வ. முனிசாமிபிள்ளையவர்களால் இயற்றப் பெற்றது. இந்நூல், இராகதாளங்கள் கற்ற சங்கிதலயஞான விற்பனர் கட்கும், சங்கித மாணவர்கட்கும், பெரும் பிரயோசனத்தைத் தர வல்லது. தமிழ் மொழியில் இது வரையில் வெளி வராத இவ்வரியநூலைத் தென்னாட்டுச் சங்கித விற்பனர்கள் ஒவ்வொருவரும் பெற்று அதன் அருமை பெருமைகட்கு இன்புறுவார்களாக. ஆசிரியர் உருவப் படமுடைய இந்நூலின்விலை அணா நான்கே. ஐந்தேகாலணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒருபிரதி தபாலில் புக்போஸ்டில் அனுப்பப்படும். 0—4—0.

விலாசம்

சி. கு. நாராயணசாமி முதலியார்,
பேரூர் P. O.,
(Via) கோயமுத்தூர்.





நூலாசிரியர் :
திரு. த. வ. முனிசாமி பிள்ளை
அவர்கள்.

பதிப்பாசிரியர்:
கோவை,
சி. கு. நாராயணசாமி முதலியார்.

தாள வொலி எண் ஒன்று.

தேசிய தாள மெனும்

முப்பத்தைந்து தாள தர்ப்பணம்

இது
கோயமுத்தூரில் பிரபல தவில் வித்துவானும்
தாளப் பிரஸ்தார-ஸ்வரப் பிரஸ்தாரங்களில்
மிகச் சமர்த்தருமாக விளங்கிய
திருவாளர்,
வ. த. முனிசாமி பிள்ளையவர்களால்
இயற்றப்பட்டு

கோவை
சி. கு. நாராயணசாமி முதலியாரால்

சென்னை
செங்குந்த மித்திரன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1941.

 [விலை அணா நான்கு

தற்சிறப்புப் பாயிரம்

பெயர் விளையாத ஓர் புலவரால் பாடப்பெற்றது.

வெண்பா

சீராரும் கோவை நகரிற் றிருமறைக
ளாராயு நாராயணசாமி—நேராகத்
தந்தான் முனிசாமி தாளத்தருப்பணத்தைப்
பந்தாக்கி யச்சிற் பதித்து.

பொருள் அடக்கம்.

விளம்பரம்

அடியிற்கண்ட புத்தகங்கள் விலேக்குக் கிடைக்கும்.
தேவையானவர்கள் எழுதிப் பெறலாம்.

(ஆராய்ச்சி நூல்கள்)

(1)	பாரதம் பாடிய வில்லிபுத்தூரர் சரிதம்	0	8	0
(2)	புகழேந்திப் புலவர் சரிதம்	0	8	0
(3)	பழநி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் சரிதம்	0	8	0
(4)	அவிநாசித்திருத்தலச் சிறப்பு (பல படங்களுடன் கூடிய புதிய பதிப்பு)	0	4	0
(5)	ஸ்ரீ நடராசர் அருட்கூத்தும்—அதன் தத்துவங்களும் (படத்துடன்)	0	1	0

2 அணு ஸ்டாம்பு வைத்தனுப்பினல் ஓர் புத்தகம் அனுப்பப்படும்.

(6)	ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடிய வரலாறு (ஆராய்ச்சி)	0	2	0
(7)	மருதவரை மாண்பும்—ஸ்ரீஞான தண்டபாணி மகிமையும் (படங்களுடன்)	0	2	0
(8)	நூற்றெட்டுமாத்திரைத் தாளக் கலிவெண்பாவும் நூற்றெட்டு மாத்திரைத் தாளங்களின் வெண்பா அந்தாதியும்	0	8	0
(9)	முப்பத்தைந்து தாள தர்ப்பணம்	0	4	0
(10)	அறிஞர் ஆராய்ந்துகண்ட அருமலர்க் கோத்து	0	6	0
(11)	திருத்தம் பெற்ற கவிச் சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் சரிதம்	1	0	0
(12)	படிக்காசுப் புலவர் சரித்திரம் (அச்சில்)	0	8	0

சி. கு. நாராயணசாமி முதலியார்,
தமிழாசிரியர்
பேரூர் P. O., கோயமுத்தூர்.

பதிப்புரை

"முப்பத்தைந்து தாளதர்ப்பணம்" என்ற பெயருடைய லயநூல் ஒன்று தமிழில் தம்மிடத்தில் இருப்பதாகவும், அது தவில் வாத்யத்தில் மகாவித்துவானும், கோவை, மலபார் ஜில்லாக்களில் திலகம்போல் விளங்கியவரும், லயஞான, தாளப் பிரத்தாரங்களில் மிகுதியான திறம் வாய்ந்தவரும், வட மொழி, தென்மொழிகளில் புலமை சிறந்தாருமாகிய காலஞ் சென்ற கோவை, திருமிகு முனிசாமிபிள்ளை அவர்களால் அருமையாக இயற்றப்பெற்ற தென்றும், கையெழுத்துப் பிரதியாகிய அந்நூலைச் சுமார் முப்பது ஆண்டுகட்கு முன் னர், கொங்கின் "களந்தை ஆதித்தேச்சுரத்திலிருந்த தமது மாணவரைப் பார்க்க வந்திருந்தபோது, அதனைத் தம்மி டம் கொடுத்துப் பார்வையிடும்படி கூறினரென்றும், மற தியோ! மற்றெக்காரணமோ! அந்நூல் அவர் திரும்பப் பெறுமலே காலஞ்சென்றன ரென்றும், வீதை, வித்துவான் திரு. வ. சுப்பிரமணியம் அவர்கள் கூறி, அதுவே இது வென்று என்னிடம் சென்றவாரம் கொங்கின் மேலைச் சிதம் பரமாகிய திருப்பேரூர்க்கு வந்திருந்தபோது அன்புகூர்ந்து அளித்தனர்.

புலமைமிக்க பெரியாரொருவர், அரிதாகவியற்றிய அருமைமிக்க நூலை அன்புடனுதவிய பெருந்தன்மைக்குப் பெரிதும் மகிழ்ந்த யான், அதனை அன்புடனும், கவனமாக வும் முழுதும் ஓதினேன். சிறப்புப் பாயிரம் உள்பட 46 நேரிசை வெண்பாக்களால் ஆக்கப்பெற்ற இச்சிறு நூல், வாக்கு நயமும், ஓசையின்பமும், அரிய இனிய கருத்துக் களும், சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் என்னும் அழகுக ளுடனும் விளங்குவதுகண்டு வியந்து, இந்நூல் இதுகாறும்

அச்சேருமல் வீணே காலஞ்சென்றது இசையுலகினர் துரதிர்ஷ்டம் போலுமென்று வருந்தினேன். தமிழில் இதுகாறும் வெளிவந்த இசை லய நூல்களில் இன்றியமையாத விஷயங்களைத் தன்னுட்கொண்டு விளங்குவதில் இதுவே முதன்மையானதென்று தாராளமாகக் கூறலாம். அன்றியும், இந்நூல், தாளார்ணவம், பரதகல்பலதாமஞ்சரி, காயகலோசனம், காயகபாரிஜாதம், சங்கீதரத்னகரம், சங்கீதசர்வார்த்த சாரசங்கிரகம், முதலிய வடமொழி ஆந்திர நூல்களையும், இசைமரபு, அகத்தியபரதம், தாளசமுத்திரம், தாளவோத்து, சங்கீதச் சந்திரிகை முதலிய தமிழ் நூல்களையும், மிகச் சிரமத்துடன் நெடுநாள் ஆராய்ந்து இயற்றியதாக நூலாசிரியர் ஓரிடத்தில் குறித்திருக்கின்றனர். தாம் பல நாள் ஆராய்ந்து கண்ட உண்மையை லயஞான விற்பன்னர் விரும்பிபெற்குமாறு தமிழ்மொழியில் இயற்றியது 'தாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற்று இன்புற' வேண்டுமென்ற விருப்பம் கருதிப்போலும்!

இந்நன்னூல், துளைக்கருவி, தோற்கருவி, நரம்புக்கருவிகள் இசைப்பவர்கட்கும், வாய்ப்பாட்டு, வீணை, பிடில், கஞ்சிரா, தபோலா, மோர்ச்சிங் முதலியன வாசிப்பவர்கட்கும், நிருத்த கீதத்தொழிலினர்க்கும், இவைகளைப் பயிலும் மாணவர்—மாணவிகட்கும் பெரிதும் உதவியளிக்கவல்லதென்பது மறுக்க முடியாத உண்மை.

"தாளதருப்பணம்" எனும் இந்நூலை, அச்சேற்றி வெளியிடுவது, நன்மையும், பயனும் ஆமென்று காலஞ்சென்ற பிள்ளையவர்கள் மாணவர் மிகப்பலர் என்னை மிகவும் வற்புறுத்தியதனலும், அவர்கள் விருப்பத்தை மறுப்பதற்கு அஞ்சியும், இந்நூலை அச்சேற்றி வெளியிட்டேன்

இந்நூலை வெளியிடுமுன், நான்முகப்பில், ஆசிரியர்பாலறிந்ததும், தக்கார்பாற் கேட்டதும், கற்பவர்களுக்கு இன்பம் பயப்பனவும், பயன் கூடுவதுமான, "தாளத்தின் சொற்பொருள் விளக்கம், தாளங்களுக்குரிய அங்கங்களும்—அவற்றிற்குரிய பரியாயப் பெயர்களும், தாளத்தைக் கைகளில் எப்படிப்போடுவது என்பதும், தட்டல், எண்ணல், விசுறுதல் என்பவற்றின் பெயர் விவரங்களும், முப்பத்தைந்து தாளங்கள் வகுக்கப்பெற்றதன் விவரம், ஐந்து சாதிகளின் பிரிவும்—அமைக்கப்பெற்றதன் விவரமும், மாத்திரை, காதை என்பவற்றின் விளக்கமும்" முதலியவற்றைத் தெளிவாக அறியும்படி புதிதாகச் சேர்த்தும், வெண்பாக்களுக்கு அரும்பதக் குறிப்புகள் வரைந்தும், மற்றும் சிலவும் கூட்டியுள்ளேன். இவைகளில் ஏதேனும் பிழைகள் அறிஞர்கள் காண்பார்களாயின், அவற்றை எனக்கு அறிவிப்பின் அத்திருத்தங்களையேற்று மறுபதிப்பில் அவற்றை வெளியிடுவேனாக.

நெடுநாள் கவனிப்பாரின்றி இந்நூல், பரண்மீது பேழையில் மூலையில் ஆழ்ந்து கிடந்ததனால், சிதலையரித்தும் சிதைந்தும், ஏடுகிழிந்தும் உருக்குலைந்தும், பழுதுபட்டும் இருந்ததைத் தமக்குள்ள மிகுதியான அலுவல்களுக்கு இடையே சிரமம் கருதாமல் முழுதும் பார்வையிட்டுச் சிதைந்துள்ள பகுதிகளைச் செப்பனிட்டும், மாறுபட்டுக் கிடந்ததை நேர்படுத்தியும், குறைகளைந்தும், கோதுநீக்கியும் அச்சேறும் வகையில் சீர்செய்தும் தந்த வித்தை. வித்துவான் திரு. வ. சுப்பிரமணியம் அவர்களுக்கும், முகவுரை வரைந்துதவிய, பண்டித திரு. ச. ஐயாசாமி பிள்ளையவர்களுக்கும் எனது அன்பார்ந்த நன்றி என்றும் உரியதாகுக.

பேரூர் (கோவை)
10-2-41

சி. கு. நாராயணசாமி முதலியார்.

பதிப்புச் சிறப்புப் பாயிரம்


வித்வான்
திரு. வ. சுப்பிரமணிய முதலியாரவர்கள்
விளம்பியது.

நிலைமண்டல ஆசிரியப்பா.

உலகெலாம் புகழ்சிவ நெறிதிகழ் வெள்ளி
மலைபர சம்பல மாநட மாடும்
பிறவா நெறியெனும் பேரு ரபிமுக
மாக விளங்கு மறம்வளர் கோவை
வியனக ரதனுள் வீரரோன் பதின்மர்
வருங்குலத் துதித்து வளர்மதி யெனவளர்ந்
தமிழ்தினு மினிதமி ழாங்கிலம் வடுகு
கன்னற் சுவைமலை யாளங் கன்னட
மாதியாம் பிறரு மரியபல் பாடைகள்
நீதிநூல் கருவிநூல் நிகழ்பல சமையநூ
லருட்ரு சைவநூ லையந் திரிபறக்
கற்றவ னழகிய கடலுடை யுடுத்த
உலகமா மகளுக் கொளிர்தரு நெற்றித்
திலக மெனத்திகழ் சென்னையே முதலாம்
பிரபலப் பதிபல பேணி யிருந்து
நீதியுந் தமிழு நித்தமும் விரித்தோன்;
கோவையி லிருந்து குணநல மாக்கும்
ஜனபி மானித்தமிழ்ப்பத் திரிகையும்
காரோ டும்பொழி லீரோ டிருந்து
கோங்குவே ளுலக ரகசியங் கோங்குநா

டன்முத லாகு நலமிகு செந்தமிழ்ப்
பத்திரி கையுந்திகழ் பள்ளத் தூரிற்
றங்கி யிருந்து தமிழுக் கரசா
மருண கிரிநவ மணிப்பத் திரிகையு
முலகுக் குணர்த்து மொருபெரும் புலமை
யுடையான்; மேலு மோட்டக் கூத்தர்
பொய்யா மொழிபுகழேந்திப் புலவர்
இரட்டையர் படிக்கா செழிற்காங் கேயர்
வில்லிபுத் தூரார் விளங்கரு ணைக்கிரி
நாதர் முதலா ஞானப் புலவர்
சரிதமும் பரத்தையர் சரச விலக்கும்
செங்குந் தக்குல விளக்கமுஞ் செய்ய
தொண்டை மண்டல சதகமுந் தூய
ஒட்டக் கூத்த ருயர்தரு மீட்டி
யெழுபது பாடிய வினிய சரிதமும்
அறிஞரா ராய்ந்து கண்ட வருமலர்க்
கோத்தேனு நூலும் புத்தக மாக்கித்
தந்தோன்; பழநித் தலவர லாறும்
பேரூர் முதலே பிள்ளையை யுண்டுமி
ழவிநா சித்தல வற்புத முதலாச்
செய்தோன்; றிருப்பா திரிப்புலி யூர்வாழ்
சண்முக ஞானச் சாமிபொற் சரணம்
பூண்ட சென்னிப் புண்ணிய முடையான்;
அருணை ரமண ரிஷிக ளருளும்
சார்ந்தோன்; கற்றவர் சங்கம் புகழும்
சீகே சுப்பிர மணியச் செம்மலார்
இராமச் சந்திரஞ் செட்டியார் சுவாமி
உருத்திர கோடீச் சுரர் சீர்ஊவே

சாமிநா தையர் சதாசிவ செட்டியார்
சேது பிள்ளை செங்கல் வராய
பிள்ளை முதலாம் பெரியார் நட்பும்
தன்மை கண்டு தருமதிப் புரையும்
பெற்றவன் ; வெற்றிவேற் பெருமா னிருபத
மறவா மனநல மாண்பினன்; மாமுனி
சாமி பரதஞ் சாற்றிய முறையே
சாற்றிய வையேழ் தாளதர்ப் பணத்தைத்
துலக்கிப் புதுக்கிச் சுடர்விடு மணியெழுத்
தச்சிற் பதித்துல கத்துக் காக்கினன்
சார்சி கூநா ராயண சாமி
என்னுநன் னுமைத் திரும்புக ழோனே.



முகவுரை

கோவை அரசியற் கல்லூரித் தமிழாசிரியரும்; சுகாநந்தா, காமசுந்தரி, சாவித்திரி சத்தியவான், போஜன், வசந்த சேனை, சுகுமாரி, தனபாலன் ஆகிய நாடகங்களின் ஆசிரியருமாகிய திரு. ச. ஐயாசாமிப் பிள்ளை அவர்கள் கூறியது.

தமிழ் மொழியில் இசை பற்றிய இயல் நூற்கள் மிகச் சில. இசைப் பனுவல்களாகப் பண்டைக் காலத்தில் பல நூல்கள் இருந்தன வென்றும்; அவற்றுள் பலவும் இறந்தொழிந்தன வென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவைகள் இறந்துபடவே பண்டைத் தமிழிசையின் உண்மை இயல்பினை அறிய இடமில்லாமலே போயிற்று.

இசையில், 'பண்ணும், பாணியும்' என இருபெரும் பிரிவுகள் உண்டு. அவற்றுள் பாணி யென்பது தாளம். அத் தாளம் காவல் செய்யுந் தன்மையது. ஒரு கட்டுப் பாட்டின் அளவில் அடங்கிப் பாடுகின்றவரை நிற்கச் செய்து பாட்டிற்கு இன்பம் பெருக்குவது அதுவே ஆகையால், தாள வியலை அறிதல் இசைவல்லாருக்கு இன்றியமையாத தாகும்.

சச்சபுட முதலான பஞ்ச தாளமும், அரைமாத்திரை யுடைய ஏகதாள முதலாகப் பதினாறு மாத்திரையுடைய பார்வதி லோசனம் ஈறுகச் சொன்ன நாற்பத்தோரு தாளமும் ஆறன் மட்டம், எட்டன் மட்டம் என்பனவும், தாள ஓரியல் தனி நிலை ஓரியல் என்பனவும், ஒன்றன் பாணி முதலாக எண்கூத்துப் பாணி இறுதியாகக் கிடந்த பதினொரு பாணி விகற்பங்களும், முதனடைவாரம் முதலாயினவும் பண்டைக் காலத்து வழங்கியிருந்த தாள விகற்பங்களாகும். இற்றைப்

பொழுதில் அவை எட்டில் பெயரளவில் நிற்பனவாகி அவற்றின் வரலாற்றை அறிதல் சிறிதுங் கூடாமற் போயிற்று.

இப்பொழுது 'முப்பத்தைந்து தாள விகற்பம்' 'நூற்றெட்டுத் தாள விகற்பம்' என இரு வகைத் தாள விகற்பங்கள் வழக்காற்றில் இருப்பனவாகத் தெரிகின்றன. அவற்றுள் 108 தாள விகற்பங்கள் என்பவை அரிதில் அறியப்படுவனவாய் வழக்கறும் நிலைமையில் இருக்கின்றன. அண்ணமலை அருணகிரிநாத அடிகள் திருப்புகழ்ப் பாக்களில் அவற்றிற்கு இலக்கியங் காணலாம் என இசைவல்லார் சிலர் கொள்ளுகின்றனர். தற்போது விரிவாக வழங்குவன முப்பத்தைந்து தாள விகற்பங்களே. அவற்றுள்ளும் ஒரு சிலவே நடை முறையிற் பயில்கின்றன.

"முப்பத்தைந்து தாள தர்ப்பணம்" என்னும் நூல் மேற்கூறிய 35 தாள விகர்ப்பங்களில் வரலாற்றை விளக்க வந்ததாகும். இந்நூல் வெண்பாவால் இயன்றது. இதன் ஆசிரியர் கோவையில் தவில் வாத்தியத்தில் மிக வல்லாரும், இசைப் புலமை, தாளப் புலமை, தமிழ்ப் புலமை, வடமொழிப் புலமைகளில் தலை சிறந்தாருமென்று அறியப் பெரிதும் மகிழ்ந்தேன்.

முப்பத்தைந்து தாளங்களை முறையாக விளக்கும் இந்நூலை அழகுபெற வெளியிட்டவர் எனது அரும் பெறல் நண்பர் திரு. சி. து. நாராயணசாமி முதலியார் ஆவர். தாளவியலில் பெரும்புலமை படைத்தவர்களில் நமது முதலியாரவர்களும் ஒருவர். தாள வகையில் அவர் வழியால் வெளிவரும் எந்நூலும் நன்னூலாகக் கருதத் தகுந்தன என்பது என் கொள்கை.

பதிப்பாசிரியர், இந்நூலில், அருஞ்சொல் விளக்கமும் செய்யுட்களின் கருத்தும் ஆங்காங்கே அமைத்திருப்பது படிப்போர்க்குப் பயன்படத் தக்கதாகும். தமது முன்னுரையாகத் தந்த தாள ஆராய்ச்சியுரை யோன்றும் நுண் பொருட்டாகிய நூல் இனிது விளங்கக் கருவியாக இருக்கும்.

நூலாராய்வதையே தமது பொழுது போக்காகக் கொண்டு பல அரிய ஆராய்ச்சி நூல்கள் வெளியிட்டு வரும் இவ்வாசிரியர், இசையுலகு இன்புறுமாறு மற்றும் பல இசை நூல்கள் வெளியிடுவாராக. இவர் தமிழ்த் தாய்க்கு ஆற்றி வரும் திருப்பணியைப் பாராட்டிப் பெருமை செய்வதே தமிழுலகு அவர்பாற் செய்யுங் கடப்பாடாகும்.

கோவை
25-4-41

ச. ஐயாசாமிப் பிள்ளை.

தாளத்தின் சொற்பொருள் விளக்கம்

வெண்பா

தான மிரண்டெழுத்தின் றன்பெருமை தன்னைமிக
வானகிரி சூழு மகிதலத்திர்—கேளுந்
தகரவுருச் சொக்கர் தனியாம் ளகரம்
பகரங் கயற் கண்ணியாற் பற்று. (தாள சமுத்திரம்)

'தா—ளம்' என்கிற இரண்டெழுத்தில் தகரச் சொரூபம் அழகிய 'சோக்கநாதர்' என்றும்; ளகரச் சொரூபம் 'அங்கயற் கண்ணியார்' (கயற்கண்ணி-மீனாட்சி) என்றும், இவ்விரு சொரூபங்களின் கூட்டுறவால் "தாளம்" என்று பெயராயிற் றென்று தாள சமுத்திரம் கூறுகின்றது. இக்கருத்தையே அகத்தியபரதமும்,

தகரமே சங்கரனும் சார்ந்த ளகரம்
பகருகின்ற பார்வதி யாம்"

என்று ஆதரித்துக் கூறுகின்றது.

'தா' என்பது சிவமாகிய சத்தும், 'ள' என்பது சத்தியாகிய சித்தும், 'ம்' என்பது சத்தும் சித்துமாகிய அச்சிவ சத்திகள் அத்துவிதமாகக் கூடியிருக்கும் இடம் என்று தெளியப்பட்டது.

ஆகவே, தாளம் சிவசக்தியின் சேர்க்கையைப் பெற்ற தாகின்றது. இதுபற்றியே தாளத்திற்கு "லயம்" என்ற பெயரும் ஏற்பட்டது. சிவனைத்தவிர வேறு எவரையும் துதியாத வேதத்தின் சிரசாகிய உபநிடதங்களில் பிரமவித் தையைத் 'தகரவித்தை' யென்று கூறப்பெற்றிருக்கிறது.

தாளக்கையராகிய ஸ்ரீ. ஞானசம்பந்தப் பிள்ளையார், தமது திருவாக்கால் வேதத்தின் முதல் எழுத்தாகிய ஓங்கா ரத்தைத் தகரமெய்யொடு புணர்த்தி,

"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவன் அன்றே"

என்று தலைவனையும், தன்னையும், தாளத்தையும் சுட்டினார். பின்னும், "தாய்பால் ஏழிசையின் அமுதுண்டு, தந்தைபால் தாளம் வாங்கி" என்றதனால், இசைக்குச் சுதி, மாதா என்றும், லயம் பிதா என்றும் வழங்கும் முது மொழியையும் விளக்கினராவர்.

இத்தகைய சிறப்புமிக்க தாளத்தைச் சிவபரமாகவும், தாளபரமாகவும் கருதித் துதிக்கப்பட்டுள்ள சுலோகம் ஒன்று வடமொழியில் உள்ளது. அது,

நாநாமார்க்கே லயோயத்ர, யதீனும் ஸ்காத்களா நிதௌ,
தம்தக்ஷிணம் சிவம் ெ்ளமி, சித்த விருத்திமயம் த்ருவம்."

என்பது.

சிவபரம்

"பலவகை மார்க்கங்களை யுடையவனும், இளம் பிறையை நீண்டசடை முடியில் இனிது தரித்தவனும், எவனிடத்துத் தவசிரேஷ்டர்களாகிய முனிவர்கட்குச் சித்தமானது ஒடுங்குகின்றதோ! அத்தகைய தட்சிணாமூர்த்தி வடிவினனும், மனதைத் தொழிற்படுத்தவல்ல செயலுடையவனும், அழிவற்றவனுமான சிவனை யான் வணங்குகிறேன்" என்பது. இது சிவபரமான பொருள்.

தாளபரம்

தக்ஷிணம், வார்த்திகம், முதலான மார்க்கங்களை யுடையதும், லகு, குரு, என்னும் யதிகட்கு இருப்பிடமானதும், எதனிடத்து உயிர்களின் புலன்களாகிய மெய், வாய், மனம், கண், செவி, முதலியவைகட்கு இன்பம் எய்துகின்றதோ!

அத்தகைய ஏற்றமுடையதும், துரிதம், மத்திமம், விளம்பம் என்னும் காலப்பிரமாணங்களைப் பெற்றிருப்பதும், அத்தகைய செயல்வாய்ந்ததும், மனதினிடத்துக் கற்பனை முதலியவைகளைத் தோற்றுவிப்பதும், மங்களமுடையது மான தாளத்தைத் தொழுகின்றேன்' என்பது. இது தாளபரமான பொருள்.

இவ்விருவகை வணக்கங்களிற் பொதிந்துள்ள பொருள்களை ஊன்றியுணர்வார்க்குத் தாளத்தின் ஏற்றம் இனிது புலனாகும்.

மற்றும், 'தலப்பிரதிட்டை' என்ற தாதுவுக்கு அதாவது சொற்பகுதிக்குக் 'கங்' என்ற விகுதி கூடி அது மிகுதிப்பட்டதனால், தாளம் என்ற சொற்றொனி ஏற்பட்டது. ஆனதனால், தாளத்தில் கீதம், வாத்தியம், நிருத்தியம் என்னும் மூன்றும் நிலை பெற்றிருக்கின்றனவென்று அறிதல் வேண்டும்.

நிருத்த-கித-வாத்தியங்கள் கூடிய "தௌர்யத்ரிகம்" என்னும் மதமிகு யானைக்குத் தாளமானது அங்குசம் என்று தெரியவேண்டும். (அங்குசம்-யானைத்தோட்டி) எவ்வாறெனின், மிகுதி, குறைவுகள் உண்டாம்போது அவ்வாறு உண்டாகாமல், சம அளவாய் இருக்கும்படி செய்யவல்ல ஆற்றல் வாய்ந்தது அங்குசம் ஆனதனால் என்க.

காலம், மானம், கிரியை என்கின்ற இம்மூன்றுங் கூடி எப்பொழுது இயங்குகின்றதோ! அப்பொழுதே தாளம் தோன்றுகின்றதென்பது, லய நூலார் மதம். க்ஷணிகம், காலம் ஆகியவற்றால் தாக்கப்பட்ட இரண்டு பொருள்களின் சேர்க்கையே கிரியை எனப்படும். (கிரியை-செய்கை) கிரியைகட்கு இடையிலிருக்கும் 'விஸ்ராந்திகாலம்' மானம் என்று சொல்லப்படும். மானம் என்பது பரிமாணம் (பரிமாணம்-அளவு) க்ஷணம் முதலான சமயம், காலம் எனப்படும்.

தாள சமிக்ஞைகளையுடைய லயத்தின் சேர்க்கையினால் கிரியை எனப்பட்டது. (சமிக்ஞை-சங்கேதப்பெயர்) கிரியை இரண்டினது சேர்க்கையின் நடுப்பகுதி "விஸ்ராமம்" என்றும், மானம் என்றும் கூறப்படும். (விஸ்ராமம்- இளைப்பாறுதல்)

லகு முதலானவைகள் அதனுடன் சேர்ந்துகொண்ட கிரியையுடன் கூடியகாலம் இசை முதலியவைகட்கு அளவு அல்லது எல்லையைக்காட்டி, 'தாளம்' என்று பெயர் பெற்றது.

அத்தாளம் இருவகைப்படும். அவை தேசியம், மார்க்கம் என்பன. தேசியம், முப்பத்தைந்து தாளத்தையும், மார்க்கம், நூற்றெட்டு, நூற்றிப்பதினொன்று, நூற்றிஎழுபத்தைந்து தாளங்களையும் குறிப்பன. இவையே சுத்தசாலகசங்கீர்ணம்' என்ற பெயரைப் பெற்றதென்று அறிதல் வேண்டும்.

க்ஷணம் முதலாகவுள்ள ரூபங்களின் காலம் எதுவோ! அக்காலமே பிராணன் என்று கூறப்படும். அப்பிராணனே இசை முதலானவைகட்கு அளவுகோலாக விளங்குவது. அதுவே தாளம் என்பதாம்.

வலது, இடதுகைகளில் கூடியும், பிரிந்தும், தொழில் செய்தும், பத்துவகை உயிர்களுடன் சேர்ந்தும் திகழ்வதே தாளம் எனக் கூறினும் பொருந்தும்.

இத்தகைய தகுதியையும், வகையையும் சிவசக்தி சம்பந்தத்தையும் பெற்ற தாளத்தை முறையாக அறிந்துணரப் பெற்றவர்கள் புகழையும், புண்ணியத்தையும் அடைவர். அதனுடன் தத்துவ ஞானத்தையும் பெற்று உலகிற் கீர்த்தியுடன் விளங்குவர்.

தாளங்களுக்குரிய அங்கங்களும்—அவற்றிற்குள்ள பரியாயப் பெயர்களும்.

தாளத்திற்கு உரிய காலம், மார்க்கம், கிரியை, அங்கம் கிரகம், சாதி, களை, லயம், யதி, பிரத்தாரம் என்னும் பத்து விதப் பிராணன்களில் அங்கமானது நான்காவது பிராணன் ஆகின்றது. பிராணன் என்பது உயிர். இது வட சொல்; அங்கம் என்பது உடல்.

தாளப்பிரத்தாரம், கிரியை அதாவது செயலின் மூலம், வெளிப்படும்போது தாளத்தின் உண்மையான உருவமும், தகுதியும் வெளிப்படவேண்டியது இன்றியமையாததாகின்றது. அங்கங்கள் என்பது அநுத்ருதம், திருதம், லகு முதலானவைகள். இவை மூன்றுமே 'ஆவர்த்தனம்' அல்லது 'ஆவர்த்தம்' என்பதை விளக்குவதற்கு அவசியமானவை. ஆவர்த்தம் என்பது ஓர் எண்ணைக் குறிப்பதோர் சொல். உதாரணம், சதுரசிரசாதி திரிபுடை தாளம் எட்டு அக்கரங்களையுடையது. அதனை லகுவாகவும், திருதங்களாகவும் எண்ணிக்கை செய்வதே ஆவர்த்தமாம். ஆவர்த்தங்களிலுள்ள உறுப்புக்களையும், தாளத்தின் எண்ணிக்கைகளையும் அறிவிப்பதற்குச் சாதகமாக ஏற்பட்ட சமிக்ஞையே அங்கம் எனக்கூறினும் தவறாகாது.

"ஏதாளா நாமாவ்யவ, ஸ்தான்யங்கானிவிதுர்ப்புத:" என்பது சுலோகம். அச்சுலோகத்திற்குரிய பொருளின் படி தாளங்களுக்கு உறுப்புக்களாக ஏற்படுகின்றவைகளே அங்கங்கள் எனப்படும். இவை 'திரியாங்கம்' 'ஷடாங்கம்' 'சோடசாங்கம்' எனப் பெயர் பெறும். இவைகளுள் அநுத்ருதம், திருதம், லகு என்ற இம்மூன்றும் 'திரியாங்கம்' என்றும் மேற்கூறிய மூன்றுடன் குரு, புலுதம், காகபாதம் என்ற ஆறும் கூடின் 'ஷடாங்கம்' என்றும், மேற்கூறிய ஆறுடன் திருதசேகரம், லகுசேகரம், லகுதிருதம், லகு திருதசேகரம், குருசேகரம், குரு திருதம், குரு திருதசேகரம்; புலுதசேகரம், புலுதத்திருதம், புலுதத் திருதசேகரம் என்ற பத்துங் கூடினல் சோடசாங்கம்' என்றும் கூறப்படும். மேற்கூறப்பட்ட "மூன்று,

ஆறு, பதினாறு" என்ற எண்களுக்குரிய "திரியாங்கம் ஷடாங்கம், சோடசாங்கம்" என்பவைகட்குப் *பரியாயச் சொற்கள் பலவிருக்கின்றன. இவைகளுள் முப்பத்தைந்து தாளங்களுக்கு இன்றியமையாததும்; தேசிய தாளமாகிய முப்பத்தைந்திற் கென்றே ஏற்பட்டவைகளுமான அநுத்ருதம், திருதம், லகு என்னும் திரியாங்கத்திற்கு மட்டும் உரியவைகளான பரியாயச் சொற்களை இதன்கீழ்த் தருகின்றேன். முதலாவது, அனுத்ருதம் இதன் மாத்திரை கால், பரியாயப் பெயர்கள் விந்து, விரதி, விராமம், கிளர் புள்ளி, பந்தம், அனுக்த, படரேழுத்து, துடி, முதலியன. இவற்றிற்கு வெண்பா—

"விந்து விரதி விராமங் கிளர் புள்ளி
பந்த மனுக்குப் படரெழுத்து—முந்து துடி
சொன்னார் கால் மாத்திரைப்பேர் சொக்கனார் மிக்கதமிழ்
நன்னு வலர்முன் நயந்து" (தாள சமுத்திரம்)

என்பது. இதன் உருவம், பாதிச் சந்திரனைப் போன்றது. ஓர் அக்கர காலம்.

திருதத்தின் பரியாயப் பெயர்கள்.

சுழி, கோம்பு, வட்டம், துரிதம், விழி, கண்டம், சக்கரம், வியோமம், வேஞ்சனம், விந்துகம், அரை மாத்திரை முதலியன இவற்றிற்கு வெண்பா—

"சுழி கொம்பு வட்டம்............ஈர் துரிதம்
விழிகண்ட சக்கரவி யோமம்—மொழிகிரங்கள்
வெஞ்சனமே விந்துகமே மிக்கவரை மாத்திரையென்
றஞ்சனவேற் கண்ணு யறி" (தாள சமுத்திரம்)

என்பது. இதன் உருவம் முழுமதியைப்போல் வட்டமானது. இரண்டு அக்கரகாலம்.

---

* பரியாயம் என்பது—ஒரு பொருள் குறித்த மறுசொல்; அல்லது ஒன்றற்குரியன அல்லது மாதிரி.

ஏகுவின் பரியாயப் பெயர்கள்

வாளி, சரளம், கோல், மாத்திரிகம், கால், செவ்வை, வச்சிரம், நேர் கிற்று, வியாபகம்.........முதலியன. இவற்றிற்கு வெண்பா—

" வாளிசர ளங்கோல் மாத்ரிகங் கால்செவ்வை
நீளுமொரு வச்ரமே நேர்கிற்று—நாளுமகிழ்
மிக்க வியாபகமே மேவு.........ஏக மெனத்
தக்க லகுப் பேராகச் சாற்று " (தாளசமுத்திரம்)

என்பது. இதன் உருவம் அம்புபோல் நேர்க் கோடுடையது. நான்கு அக்கரகாலத்தைக் கொண்டது. மாத்திரை ஒன்று.

தாளத்தைக் கைகளில் எப்படிப்போடுவது என்பதும், தட்டல்—எண்ணல்—விசுறுதல் என்பவற்றின் பெயர் விவரங்களும்

தாளத்தை எவ்வாறு கைகளிற் போடுவது, போட்டுக் காட்டுவது, என்பவற்றின் முறை அல்லது கிரமங்களைத் தெளிவாக வாசகர்கள் உணரும்படி இதன் கீழ் விவரிக்கின்றேன்.

அங்கப் பிரத்தாரத்தினின்றே தாளம் தோன்றியதென்று இசை, லயம்பற்றிய நூல்களால் அறியப்படுகின்றது. அங்கப்பிரத்தாரமானது, தாளத்தின் நான்காவது பிராணனாகவும், இதற்கு முந்தியதான காலம், மார்க்கம், கிரியை என்கின்ற மூன்று பிராணன்களின் வரிசைகளைப் பின்பற்றியும், அவற்றிலிருந்தே ஏற்பட்டதாகவும் தெரிகிறது. தாளமானது, பிரத்தாரம் என்னும் கிரியை மூலமாய் வெளிப்படும்போது தாளத்தின் உண்மையான தகுதியும், செயலும் வெளிப்படவேண்டியது அவசியமானதால்,

அவைகளைப் பலவித அங்க முறைகளால் வகுத்தனர் ஆன்றோர். இந்த அங்கங்களிலும் முன்பின் முறையாகக் கூறவேண்டிய நிர்ணயங்களும் ஏற்பட்டிருக்கின்றன. நாதப் பிரம்மமானது தாளப் பிராணனாகிச் செய்கையின் மூலம் பிரத்தாபிக்கப்பெற்று வரும்போது, கிரியையின் கிரமங்கள், பிரத்தாரக் கிரமங்களைப் பின்பற்றியே அங்க அவையவங்களோடு சேர்ந்ததாக விருக்கின்றது. பிரத்தாப மூலம் ஏற்பட்ட மூன்றங்கம், ஆறங்கம், பதினாறங்கம், அதாவது, திரியாங்கம், ஷடாங்கம், சோடசாங்கம் என்பவற்றைத் தாளமாகப் போடும் வகையைக் கவனிப்பாம்.

தாளத்திற்குரிய தசப்பிராணன்களில் 'கிரியை' என்பது மூன்றாவது பிராணன். இக்கிரியை, "மார்க்கக்கிரியை" என்றும், "தேசியக்கிரியை" என்றும், இருவகைப்படும். இவ்விருவகையில் (1) *"நிஸ்ஸப்தம்" (2) ஸஸப்தம்" என இரண்டு உபபிரிவுகளும்; இவ்வுபபிரிவுகளில் ஒவ்வொரு பிரிவுக்கும் நன்னான்கு பேதங்களும் ஏற்பட்டுள்ளன. மேற்காட்டிய நிஸ்ஸப்த, ஸஸப்த கிரியைகளில் முதலாவது நிஸ்ஸப்தக் கிரியைப்பற்றிக் கூறுகிறேன்.

I. நிஸ்ஸப்தம்

(1) ஆவாபம், விக்ஷேபம், பிரவேசம், நிஷ்கிராமம், என நான்கும் உபபிரிவாகிய நிஸ்ஸப்தத்தைச் சார்ந்தவை. இவற்றுள் ஆவாபம் என்பது, தாளம் போடத்தொடங்கு முன் கையின் ஐந்துவிரல்களையும் முஷ்டியைப்போல் மூடிக் கொள்ளுதல், அல்லது மடக்கிக்கொள்ளுதல்.

(2) விக்ஷேபம் என்பது, மூடிய அல்லது குவித்த கையின் விரல்களைத் திறத்தல்.

*நிஸ்ஸப்தம்=ஓசையின்மை. வடசொல்.

(3) பிரவேசம் என்பது, பன்னிரண்டு அங்குலப் பிரமாணம் அளவு விரல்களைத் திறந்தவண்ணம் வலது கையை, இடதுகையின் புறமாகக் கொண்டுவருதல்.

(4) நிஷ்கிராமம் என்பது, இடதுபுறமாகக் கொண்டுவந்த வலக்கையை, ஆறு அங்குல அளவு உயரமாகத் தூக்கிக் காண்பித்தல்.

II ஸஸப்தம்*

த்ருவம், சம்யம், தாளம், சன்னிபாதம் என நான்கும் தேசிகக் கிரியையின் உபபிரிவாகிய ஸஸப்தத்தைச் சார்ந்தவை. இவற்றுள் (1) த்ருவம் என்பது—கையினால் சிடிகை போடுவது. (2) சம்யம் என்பது—இடதுகைமேல் வலது கைகொண்டு தட்டி விசுறுதல்.

(3) தாளம் என்பது—மேற்கூறியதுபோல் பன்முறை செய்வது.

(4) சந்நிபாதம் என்பது—இடது வலது கைகளை ஒன்றுசேரச் சமப்படுத்திச் சேர்த்துக் காட்டுதல்.

மேற்கூறியவைகள் கைகளால் விளக்கும் அபிநயங்கள் எனப்படும்.

அக்ஷரகாலம் என்னும், அங்கம் விளக்காமலும் ஒருமுகமாகத் திருத காலத்தில் கையினால் சிடிகைமட்டும் போடுவதைச் சாபுதாளம் என்று கூறுவர்.

மேற்கூறிய கிரியைகளிலிருந்து த்ருவகம், சர்ப்பிணி, கிருஷ்யை, பத்மினி, விசர்ச்சிதம், விக்ஷிப்தம், பதாகம், பதிதம், என எண்வகைத் தேசிக ஹஸ்தாபினயங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவை :—

---

*ஸஸப்தம் ஓசையுடையது. வடசொல்.

(1) த்ருவகம்—சப்தம் அல்லது ஓசையற்ற வண்ணம் கையினால் சிடிகை போடுதல்.

(2) சர்ப்பிணி—இடதுகையை, வலது புறக்கையினிடம் நீட்டுதல்.

(3) க்ருஷ்ணை—வலதுகையை, இடதுபுறக் கையினிடம் நீட்டுதல்.

(4) பத்மினி—தலைகீழாகக் கையை நீட்டுதல்.

(5) விஜர்ஜிதம்—கைவிரல்களைக் குத்துச் சண்டைக்குக் கையை மடக்குகிறதுபோல் மடக்கி, வலது, இடது முதலிய இருபுறங்களில் ஏதாவது ஒருபக்கத்தில் வீசுறுதல்.

(6)விக்ஷிப்தம்—கைவிரல்களைத் திறந்து நீட்டித் திரும்பவும் மூடுதல்.

(7) பதாகம்—கையை உயரமாயெடுத்தல்.

(8) பதிதம்—வலதுகையை இடது புறக்கையினிடம் கொண்டுவருதல் என்பன.

முப்பத்தைந்து தாளங்கள் வகுக்கப் பெற்றதன் விவரம்.

'சோடசாங்கம், சப்தாங்கம், சடாங்கம், திரியாங்கம், எனப்படும் அங்க வகைகளில் நான்காவதாகிய திரியாங்கத்தைக் கொண்டு முப்பத்தைந்து தாளங்களை மூதறிஞர்கள் முறையாக வகுத்தனரென்று அறியப்படுகின்றது. திரியாங்கம் எனப்படுவது அநுத்ருதம்—திருதம்—லகு என்னும் மூன்று அங்கங்களும் கூடியதோர் தொகுதி. இம்மூன்று உறுப்புக்களையும், அவர்கள் முதன்மையாகக் கொண்டது, கைகளால் தட்டுதல் என்னும் அநுத்ருதமும்; தட்டிய கையை

எதிரே விசுறுதல் என்னும் திருதமும்; விரல்களால் எண்ணுதல் என்னும் லகுவும் ஒன்றுசேர்ந்து தாளம் என்பதன் சொரூபத்தை விளக்கிக் காட்டுதல் கொண்டென்க. அன்றியும் அநுத்ருதம், திருதம், லகு என்னும் உறுப்புக்கள், கைகளால் செய்து காட்டுவதற்கு எளிதாயும், காலத்தைக் காட்டக் கூடியதாயும், மேலானதாயும் இருப்பது கருதியே இவற்றை முதலில்வைத்துக் கூறினரென்று கொள்ளுதல் அமைவுடைத்தாம்.

அல்லாமல், சதுரசிரம், திரிசிரம் மிசிரம், கண்டம், சங்கீரணம் என்னும் ஐந்து சாதிகளில் ஒவ்வொரு சாதிக்கும், துருவம்—மட்டயம்—ருபகம்—சம்பை — திரிபுடை — அடதாளம் ஏகதாளம் என எழு தாளங்களாகப் பெயரமைந்து ஐயெழு முப்பத்தைந்து தாளங்களாக விரிவு பெற்று விளங்குதற்காயின. இவ்வகையில் வகுக்கப் பெற்றதே முப்பத்தைந்து தாளங்கள் என்று அறிக.

மேலே விளக்கப்பெற்ற ஐந்து சாதிகளில் மிகவும் சுருங்கிய எண்ணிக்கையுடையது திரிசிரசாதி. இச் சாதிக்கு ஏற்பட்ட லகு மூன்றக்கரம். ஆனதனால் இதனை முன்னர் விவரிக்கவேண்டிய தெனினும், சாத்திர நியாயமாகவும், வரன் முறையாகவும் கவனித்தால், சதுரசிர சாதியையே முதன்மையாக வைத்துப் பேசவேண்டியதாய் முடிகின்றது. என்னெனின், சதுரசிர சாதி லகு, நான்கு அக்கரகாலமாகவும், சர்வ லகுவாகவும், முதன்மையுடைய தாகவும் இருக்கின்றன. "ஏகம் ஸதா" என்னும் உண்மைக்கு உரியதாகவும் அமைகின்றது. 'சதுஸ்' என்னும் சொல்லுக்குச் 'சதுர்' அல்லது 'நான்கு' என்ற பொருளும், 'நான்முகப் பிரமம்' என்ற பொருளும் ஆகின்றன. சிருஷ்டியின் தலைவராகிய அகண்டாகண்ட சுத்த பரிபூரண நிரந்தர சத்து சித்தானந்தமாகிய அகண்டப்பெருஞ் சோதியே அது குறிப்பதாக வெண்ணி, அச்சதுரசிர சாதியை முன்னர் வைத்துப் பேசுகின்றேன்.

ஐந்து சாதிகளில் சதுரசிரசாதியை முன்னர் வைத்தது போலவே, எழு தாளங்களில் துருவ தாளத்தை முன்னர் வைத்து மூதறிஞர் கூறினர். யாதுபற்றியெனின்,

"ஹம்ஸா ரூடம் புரோபாகே, திரயேதஸ சதீயுகம்
யேகஸ் ஸ்ரீயுக்த வாமாங்கம், ரத்ன கேயூர தாரணம்;"

"ஸ்வேதவஸ்த்ரதரம் ஸாந்தம்—மக்தாஹா விபூஷிதம்
த்ருவதாள ஸதாத்யாயே, சங்க சக்ர கதா தரம்"

என்ற சுலோகங்களின் பொருள்களைச் சுருக்கமாகவும் விரிவாகவும் அறிந்ததுகொண்டாம். இப்பொருள்களைக் கவனிக்குமிடத்து, சர்வ சிருட்டியின் ஆதிகாரணமாகிய அகண்டாகண்டமான பெரியதொரு சக்திக்குச் சிருட்டி—திதி—சங்காரம் அல்லது ஆக்கல்—காத்தல்—அழித்தல் என்னும் முக்குணம் பொருந்திய முத்தொழில்கள் முறையாக வமைந்திருப்பது விளக்கமாகும். சதுரசிரம் என்பது நான்முகப் பிரம்மத்தின் வதனங்களின் எண்ணிக்கையை அநுசரித்து வரையறுத் திருப்பதாலும், திரிசிர சாதி லகுவை யடுத்து விளங்குவது துருவதாளம் ஒன்றேயானதாலும், சதுரசிர தாளத்தை முதன்மையாக வைத்துக் கூறினராவர்.

துருவதாள முதல் ஏகதாளம் ஈறாக எழுதாளங்களிலும் அவற்றையொட்டிய ஏனைய தாளங்களிலும், அலங்காரங்கள். கீதங்கள், தானவர்ணங்கள், சுரஜதிகள், பல்லவி, கீர்த்தனங்கள் முதலியவைகளை லோகோபகாரமாக சங்கீத, வித்வான்கள் இயற்றியருளினர். இங்ஙனம் இயற்றி உதவிய பல்லவி, கீர்த்தனங்களில் அமைந்த தாளங்களுக்கு, சௌகம், அதாவது விளம்பம்; மத்திமம்—துரிதம் என்னும் மூன்று காலங்களையும், ஜதி நடை சுவர நடைகளையும் ஏற்படுத்தினர். இங்ஙனம் ஏற்பட்டவைகள் நிருத்தம்—கீதம், வாத்தியம் ஆகிய மூன்றிலும் உபயோகம் பெற்று, வழக்கத்திலும் சிரஞ்சீவியாக நிலைபெற்று விளங்குவதற்கு ஆயிற்று.

ஐந்து சாதிகளின் பிரிவும்—அமைக்கப்பெற்றதின் விவரமும்.

தேசியம், மாாக்கம் என்னும் இருவகைத் தாளங்களுள், தேசிய தாளமாகிய முப்பத்தைந்து தாளத்திற்கு ஐந்து சாதிகளை அன்றோர் வகுத்தனர். அச்சாதிகள் சதுரசிரம், திரிசிரம், மிசிரம், கண்டம், சங்கீர்ணம் எனப்பெயர் பெறும். இவற்றிற்கு முறையே நான்கு, மூன்று, ஏழு, ஐந்து, ஒன்பது என அக்கரங்களையும் நிர்ணயித்தனர். நான்கு அக்கரங்கள் உடையதால் சதுரசிரமென்றும், மூன்று அக்கரங்கள் உடையதால் திரிசிரமென்றும்; முதற்சாதியாகிய நான்கு அக்கரங்களுடைய சதுரசிரத்தையும், இரண்டாஞ்சாதியாகிய மூன்று அக்கரங்களுடைய திரிசிரத்தையும் கூட்டி மிசிரமென்றும்; (மிசிரம்=கலப்பு. வடசொல்) மூன்றக்கரமுடைய திரிசிரத்தையும், மூன்றுஞ் சாதியாகிய ஏழக்கரமுடைய மிசிரத்தையும் சரிபாதி துண்டித்துக் கண்டமென்றும்; (கண்டம்—துண்டித்தல்) நான்காஞ்சாதியும், ஐந்து அக்கரங்களையு முடையதுமான கண்டத்துடன் முதல் கூறியதான சதுரசிரத்தையும் சேர்த்துச் சங்கீரணம் என்று பெயர்கொடுத்து ஐந்து வகைகளாக வகுத்தனர். (சங்கீரணம்—கலப்பு)

இங்ஙனம் பெயர்களை பெற்ற ஐந்து சாதிகள் 4, 3, 7, 5, 9, என்ற எண்களைப் பெற்று அவைகளே ஒவ்வோர் சாதிக்கும் லகுக்களாக அமைந்தன. இவ்வெண்ணிக்கையுடைய இனப்பிரிவுகள்கொண்ட லகுக்களே 'களை' எனப்பெயருங்கொண்டு சதுரசிரகளை, திரிசிரகளை மிசிரகளை, கண்டகளை, சங்கிரணகளை எனவழங்கப் படுகின்றன. இவைகளே காலங்கள் எனவும் பெயர்பெறும். சாதிபேதங்களை, லகு ஒன்றுமட்டுமே அடையும். கதிபேதங்களை சடாங்கங்களும், சப்தாங்கங்களும் அடைகின்றன.

களை என்பது, மேலேகாட்டிய அங்கங்களின் ஒவ்வொரு அக்ககாலத்துள்ளும் அடங்கி நிற்கும். இங்ஙனம் அடங்கியிருக்கும் எல்லாக் களைகளின் சேர்க்கையே "கதி" எனக் கூறப்படும். அக்கதி, சதுரசிரகதி, திரிசிரகதி, மிசிரகதி,

கண்டகதி, சங்கீரணகதி என ஐந்துவகைப்படும். மேற்கூறப்பெற்ற சதுரசிரமுதல், சங்கீரணம் ஈருகவுள்ள ஐந்து சாதிகட்கும் கூறப்பட்ட அக்கரகாலங்களின் எண்ணிக்கையேகளே, அல்லது கதி எனக்கூறினும் பொருந்தும்.

மாத்திரை

'க்ஷணம்' என்று கூறப்பெற்றதொரு காலத்தை ஒரு களே என்று சங்கீத விற்பன்னர்கள் கணக்கிட்டிருக்கின்றனர். அது, நமது அநுட்டானக் கணக்கிற்கு ஒரு மாத்திரையின் காலத்தைக் காட்டுகின்றது. மாத்திரை என்பது, ஒரு கண்ணடிப்பொழுது, அல்லது கைநொடிப் பொழுதைக் குறிப்பது. இரண்டுகளே ஒரு சதுர்ப்பாகமென்றும், இரண்டு சதுர்ப்பாகம் நான்கு மாத்திரைக்காலமென்றும், அந்தக் காலமே அநுத்ருதமென்றும், அவர்கள் அளவிட்டிருக்கின்றனர். தற்கால அநுட்டானத்தில், அநுத்ருதம் என்று சொல்லப்படும் காலமானது. ஒரு அக்கரம் எனப்படும். இரண்டு அக்கரங்களேயுடையது திருதம் என்று கூறப்படும். இரண்டு திருதங்கள் கூடிய நான்கு அக்கரம் ஓர் 'லகு' எனப்படும். இங்ஙனமே காகபாதம் வரையும் முறையாகக் கணக்கிட்டுக்கொள்க. ஸ்தூலகாலத்தை மாத்திரைக் கிரமத்திலிருந்து லயஞான விற்பன்னர்கள் ஆரம்பமாக வைத்துக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. மேற்கூறப்பட்ட காலக்கிரம வீதாசாரங்களுக்கு அவ்விதம் பெயர்கள் கொடுத்திருப்பதற்கு விவரம் சரியாக அறிந்துகொள்ளக் கூடவில்லே. ஆனல், ஒரு அக்கர காலத்திற்கு நான்கு மாத்திரையென்று நிர்ணயத்திருக்கும் அந்தரங்கம் அடியில் வருமாறு:—

சுருதியானது கண்டத்தின் தொனிஸ்தானத்திலிருந்து தொடங்கி ஒசைப்பெட்டியாகிய வாயில் அடைந்து, உச்சாரணக் கிரமமாக வெளிவரும்போது, ஆரம்பத்தானத்தில் ஒரு மாத்திரைக்காலமும்; உச்சரிக்கும் காலத்தில் ஒரு

மாத்திரைக் காலமும்; இடையில் இரண்டுமாத்திரைக் காலமுமாக அடைபடுகிறது. ஆனால், சங்கீத வித்துவான்கள் தற்கால சங்கீதத்தை அநுசரித்து இந்த நான்கு மாத்திரைக் காலத்தைக் கணக்கிடாமல், ஒரு அக்கரகாலமாகப் பிரத்தாரத் தொடக்கத்திற்குக் கணக்கிட்டிருக்கின்றனர்.

'காதை' என்பதன் விளக்கம்

இடது உள்ளங்கையை அகலத்திறந்து வைத்துக் கொண்டு, வலது கையை உயரத்தூக்கி, தூக்கிய கையை இடதுகையின்மீது தட்டி, தானிருக்கும் திசையிலிருந்து எதிர்த்திசையில் வலதுகையை வீசுதலேத்தான் 'காதை' என்று இசைநூல் வல்லார் கூறுவர். இதனைத் தென்னாட்டார், காதை எனத்தமிழில் வழங்குவர். தெலுங்கு அல்லது வடமொழியினர் இதனைக் "காது" (గాదు) என்று கூறுவர். Gath காத் என்பது இந்துஸ்தானி.

இங்ஙனம் தாளத்தைச் செய்கையின் மூலம், காண்பிப்பதன்றிச் சிடிகையினால், அக்கரங்களை எண்ணிக்கையாகக் காட்டாமல், ஊமைத் தட்டாகமட்டும் தட்டிக்காட்டுவதைச் "சாப்புத்தாளம்" அல்லது பொதுநடைத் தாளம் என்று சொல்லுவர்.

இவ்வாறு கூடிப்பிரியும் அஸ்த விநியோகத்தை, ஆறு காலங்கள் அதாவது சட்காலம் என்றும்; எழு காலங்கள் அதாவது சப்தகாலம் என்றும், லயஞான விற்பன்னர்கள் நியமனம் செய்கின்றனர், அந்நியமனம் அதாவது கட்டளைகள், 2-4-8 16, 32, 64 ஆகிய எண்களைச் சட்காலமாகவும்; இந்த 64 என்றுடன் மேலும் 64 எண்ணைக்கூட்டி, கூடியதான 128 நூற்றிருபத் தெட்டு அக்கரகாலத்தைச் சப்த காலமாகவும் வழங்கும்படி செய்யப்பெற்றதென்பதே. ஆனால், சட்காலம் என்று கூறப்பெறும் ஆறுகாலம்தான் இசையுலகில் தற்காலம் பழக்கத்திலும் வழக்கத்திலும் இருந்துகொண்டிருக்கின்றன.

முப்பத்தைந்து

தாள *தர்ப்பணம்

காப்பு

குறள் வெண்பா

கருணைக் கடலே! கரிமுகவென் றுலே
வருணைத்தேழ் தாளம் வரும்.

சிறப்புப்பாயிரம்

நூல்வரலாறும்—நுதலியபொருளும்—நூற்பெயரும்.

நேரிசை வெண்பாக்கள்.

ஆதிதிரு வாய்மொழிய தாஞ்சாம காந்தருவ
மோது பரதமெனு மோர்மூன்றை—நீதி
முறைவழிசார் பென்ன மொழிமூன்று நூலி
லறை யையேழ் தாளதர்ப்ப ணம். 1

சந்தான பரம்பரை.

ஆதிசிவ னந்திக் கருள வவர்முனிவர்க்
கோதினரஃ தன்றி யுமைமுருகற்—கோதவவன்
கும்ப முனிக்கருளக் கும்பமுனி செந்தமிழா
லெம்பந்ததங் தீர்த்தா னிசைத்து. 2

ஆக்கியோன் பெயர்.

வடகலையும் தென்கலையும் வல்லான் பரதக்
கடலைக் கடைந்து கதிசெய்—அடலையேழ்
தாளவமு தத்தையுல குக்குத்தந் தான்கோவை
ஆளுமுனி சாமி யமைத்து. 3

---

* தர்ப்பணம்-கண்ணாடி. (வடசொல்)

தாளதசப்ராணன்.

காலநல மார்க்கங் கிரியையங் கங்கிரகம்
கோலமிகு சாதிகளை கூறிலயை—சிலயதி
நீடுபிரஸ்த் தாரமென நேராகவே பரதம்
பாடுவது தாளவுயிர் பத்து. 4

அங்கமும் உபாங்கமும்; பரியாயப் பெயர்களும்.

அநுதுரி தந்துரித மம்பா மிலகு
தநுகுருபாம் பாம்புலுதம் சந்தச்—சனியிவரும்
காகபத மென்னக் கரைபரத நூலினுரை
நாகமணி வானருளா னூடு. 5

சாதி நடை.

சதுரத் ரிசிர மிசிரகண்டஞ் சங்க்ர
மதகதக, தத்தின, மன்னும்—ததின
தகதக, தக ததின, ததின
தகத தகதநடை தான். 6

தாளங்கள்.

துருவமட்ட யம்ரூப கஞ்சம்பை தூய
திரிபுடை தாளமொடு சேர்ந்து—வருமட
தாளமே கத்தாளம் தாண்டவத்திற் காட்டியுல
காளர னூர்வகுத்த தாம். 7

பொதுவுறுப்பு.

சேட னுலகைச் சிரமிசையே தாங்குதல்போல்
ஆடுமருட் டாளத்துக் காதாரம்—பாடு
பொதுவுறுப்பங் கஞ்சாதி போற்றக் கரமாத்ரை
யிதுநான்கு மாமெனவே யெண். 8

நூற்பயன்.

கருமாத்தங் காமம்வீ டென்னுஞ் சதுரப்
புருடார்த்தம் வந்து புகுதும்—நிருமாண
ஐக்கெழுதா ளத்தை அறைதாள தர்ப்பணத்தைப்
பைங்தொடியே! கற்பவர்கள் பால். 9

அவையடக்கம்.

குற்றங்கள் போக்கிக் குணமாக்கிக் கொள்வரெனப்
பெற்றவர்முன் பிள்ளைகள் பேசுதல்போற்—கற்ற
பெரியா ரவையிற் பிதற்றியவென் சொல்லு
மரிதாகக் கொள்வா ரவர். 10

பாயிரம் முற்றிற்று.

நூல்

முதலாவது
சதுரசிர சாதி துருவதாளம்

அங்க உருவம் புளுநத்திருதம் அக்கரம் 14 தாளவடிவம் 1011
ஆகும் பேதம் 8192 மாத்திரை 3½ காணும்பேதம் 552

நேரிசை வெண்பாக்கள்

ஒரு[1]கோ லொரு[2]கொம் பிருகோ[3] லுலகே
வருமேயெண் ணக்கர மாத்ரை—[4]அரையேழ்
சதுரசிர சாதி துருவமெனுந் தாள
[5]விதிமுறையீ தென்றார் விரித்து. க

சது-மட்டயதாளம்

அங் உரு குருதிருதம் அக் 10 தா வடி 101
ஆகு பேத 512 மாத் 2½ காணு பேத 41

சதுரசிர சாதி மட்டய தாள
மதுகோல்[1] மதிகோலா மாத்ரை—அதுகேள்
இரண்டரை அக்கர[2] மீரைந்தென் றார்[3]சீர்
[4]அரண்டரு நூலை யறிந்து. உ

---

1 கோல்—லகு. 2 கொம்பு—திருதம். 3 இருகோல்—இரண்டு லகு. 4 உலகேவருமெண்ணிலக்கரம்—அட்சரத்தைக் கணக்கிட்டால், கீழ் ஏழ்; மேல் ஏழ் எனும் பதினன்கு உலகங்கள் காணும். 5 அரையேழ்—மூன்றரை. 6 விதிமுறை—நியமன வரிசை. 7 விளம்புதல்—சொல்லுதல்.

1 மதி—திருதம். 2 ஈரைந்து—பத்து. 3 சீர்—சிறப்பு. 4 அரண்—காவல்.

சது-ரூபகதாளம்

அங் உரு லகுதிருதம்	அக் 6	தா வடி 0
ஆது பேத 32	மாத் $1\frac{1}{2}$	காணு பேத 3

நாலு முகச்சாதி ரூபக நற்றாளம்
[1]ஏலுமதி கோலுக் [2]கியன்மாத்ரை—[3]காலிருமூன்
றக்கர மாறுகும் [4]ஆதி மறை யோதுமுறை
நெக்குருகி நெஞ்சே! நினை. ௩

சது-சம்பைதாளம்

அங் உரு லகுதிருதசேகரம்	அக் 7	தாவடி 100
ஆது பேத 64	மாத் $1\frac{4}{3}$	காணு பேத 25

[1]அம்பு [2]துடி[3]மதியோ டாஞ்ச துரசம்பை
[4]உம்பரு ரையக்கர மோரேழே—[5]தம்பனஞ்செய்
மாத்திரைக [6]ளேழ்காலே [7]மாபரத மென்னும்
சாத்திரத்திற் காணத் தகும். ச

சது-திரிபுடைதாளம்

அங் உரு குரு	அக் 8	தா வடி 100
ஆது பேத 128	மாத் 2	காணு பேத 41

நாலுதிசைச் சாதித் திரிபுடை நற்றாளம்
கோலலொ டிருவட்டம் கூடவமை—[1]நாலொடுநா
லக்கர மாத்திரை [2]நாலரை யாமெனவே
தக்கபுல வோர்[3]வகுத்தார் தான். ரு

---

1 ஏலுதல்=பொருந்துதல். 2 இயலுதல்=இசைதல். 3 இருமூன்றகால்=ஆறேகால், அதாவது ஒன்றரை. 4 ஆதி=முதல்வன் அதாவது கடவுள்.

1 அம்பு=லகு. 2 துடி=அநுதிருதம். 3 மதி—திருதம் 4 உம்பர்=தேவர். 5 தம்பனம்=அசைவறல். 6 ஏழ்கால்=ஒன்றேமுக்கால். 7 மாபரதம்=மா, பெரிய, பரதம், பரத சாத்திரம், அது பா—பாவத்தையும், ர—ராகத்தையும், இராகத்தையும், தா—தாளத்தையும் உடையது.

1 நாலோடு நால்=எட்டு. 2 நாலரை=இரண்டு. 3 வகுத்தார்=வரைப்படுத்தினர்.

சது-அடைதாளம்

அங் உரு புளுதம்	அக் 12	தா வடி 1100
ஆகு பேத 2018	மாத் 3	காறு பேத 649

[1]சதுர வடதாளம் சாற்று முறைகேள்
அது [2]வாளி வாளி யமையும்—[3]மதிமதியே!
அக்கர [4]மாறுமுகன் கையே! [5]யறைமாத்ரை
[6]நக்கன் [7]படைத்தலையே [8]நாடு ௬

சது-ஏகதாளம்

அங் உரு 1	அக் 4	தா வடி 1
ஆகு பேத 8	மாத் 1	காறு பேத 1

[1]ஆதியெனுஞ் சாதியிலே [2]அந்தமெனுந் தாளத்துக்
கோதியசி ரங்கங்கோ லொன்றேகேள்—[3]வேதன்
முகமக் கரமே! [4]முருகன் தமையன்
[5]முகவக் கரமாத்ரை [6]முன். ௭

---

1 சதுரம்=நான்கு. 2 வாளி வாளி=இரண்டு லகுக்கள், வாளி—லகு. 3 மதி மதி=இரண்டு திருதம், இவைகள் அடுக்குச் சொற்கள். 4 ஆறுமுகன்கையே=ஆறுமுகங்களையுடைய வேலாயுதக் கடவுள், திருக்கரங்கள் பன்னிரண்டு. 5 அறை=சொல். 6 நக்கன்= சிவபெருமான். 7 படைத்தலை=முத்தலையுடைய சூலாயுதம், அவ்வாயுதம், சிவபெருமானுக்குரியது. 8 நாடு=நினை.

1 ஆதியெனுஞ்சாதி=முற்சாதியாகிய சதுரசிரம். 2 அந்தமெனுந் தாளம்=எழுதாளங்களில் கடைசி, ஏகதாளம். 3 வேதன் முகம்=பிரமன் வதனம் அது நான்கு. 4 முருகன் தமையன்=கந்தனின் முன்னோன் கணபதி. 5 முகவக்கரம்=அத்திருமுகத்திலுள்ள திருக்கை தும்பிக்கை அது ஒன்று 6 முன்=முன்னுதல்; நினைத்தல். தொழிற்பெயர்.

இரண்டாவது
திரிசிரசாதி-துருவதாளம்

அங் உரு குரு நிருதசேகரம் அக் 11 தா வடி ஒரு நிருத சேகரம்
ஒரு நிருதம் 2. நிருத சேகரம்
ஆரு பேத 1024 மாத் $2\frac{4}{3}$ காறு பேத 149

[1]விந்துவட்டம் [2]வட்டமொடு[3]விந்துவட்டம் விந்து
வந்த திரிசிரதுர் வத்துக்குப்—[4]பந்தமொழி [வட்டம்
[5]ஏகாத சாக்கரமே [6]எண்மாத் திரை[7]மூன்றுக்
கோ! கோ!! காலில்லை யுணர். க

திரி-மட்டயதாளம்

அங் உரு குரு அக் 8 தா வடி நிருதசேகரம் இரு
ஆரு பேத 128 மாத் 2 தம் நிருதசேகரம் கா.பேத 21

[1]முத்தலைச் சாதிமட்ட யத்தை மொழியக்கேள்
[2]வித்து விழி[3]விழி வித்துவிழி—வைத்தமுறை
அக்கர மெட்டே யதன்மாத் திரையிரண்டே
[4]துக்கமறும் நெஞ்சே! துதி. உ

திரி-ரூபகதாளம்

அங் உரு லகு அநுத்ருதம் அக் 5 தா வடி இருதம் இருத
ஆரு பேத 16 மாத் $1\frac{1}{4}$ சேகரம் கா.பேத 3

திரிசிர ரூபகம் [1]சேர்கா லோர்மாத்ரை
துரித மொடுதுரிதம் தோன்றும்—[2]விரதி
[3]பஞ்சாக் கரமே [4]பரத முணர்ந் தெமனுக்
கஞ்சாதார் சொன்ன [5]ரறி. ௩

---

1 விந்து வட்டம்=திருதசேகரம். 2 வட்டம்—திருதம். 3 விந்துவட்டம் விந்துவட்டம்—இரண்டு திருதசேகரம். 4 பந்த மொழி—கட்டை நீக்கு. 5 ஏகாதசம்—பதினொன்று. 6 எண்மாத் திரை—எண்ணுகின்ற மாத்திரை. 7 மூன்றுக்குக் காலில்லை—மூன் றுக்குக் கால் குறைந்தால் இரண்டேமுக்கால். 8 ஓ! ஓ!! வியப்பக்குறி

1 முத்தலைச்சாதி—திரிசிரசாதி. 2 வித்துவிழி—திருதசேகரம் 3 விழி—திருதம். 4 துக்கமறும்—விசனம் நீங்கும். விந்தென்பது, வித்தென வலித்தல் விகாரம் மேற்றது.

1 சேர்காலோர் மாத்திரை—ஒன்றே கால்மாத்திரை. 2 விரதி—அநுத்ருதம் 3 பஞ்சாக்கரம்—ஐந்தெழுத்து. 4 பரதமுணர்ந்தவர் எமனுக்கு அஞ்சாதார்—பரதசாத்திரத்தை அறிந்தவர்கள் காலனுக்குப் பயப்படமாட்டார். 5. அறி—உணர்.

திரி-சம்பைதாளம்

அங் உரு லகுதிருதம் அக் 6 தா வடி ஒரு திருதசேகரம்
ஆகு பேத 32 மாத் $1\frac{1}{2}$ அநுதிருதம் திருதம்
கா. பேத 13

[1] ஆடும் பெருமான் [2] அருளால் மொழிபரதம்
பாடும் திரிசிரசம் பைமாத்ரை—நாடும்
[3] அறுகா [4] லா றக்கர மங்கஞ் [5] சுழிகால்
[6] மறுமுறைகால் [7] வட்ட [8] மதி. ௬

திரி-திரிபுடைதாளம்

அங் உரு லகுதிரு தசேகரம் அக் 7 தா வடி திருதசேகரம்
ஆகு பேத 64 மாத் $1\frac{4}{3}$ இரண்டு திருதம்
கா. பேத 21

திரிசி ரதிரிபுடை [1] வட்டந் திகழ்கால்
துரிதந் துரிதந் [2] தொடர்மாத்—திரைதானேழ்
காலக் கரமேழே காணப் பரதமெனும்
நூலில் மனமே! [4] நுழை. ௫

திரி-அடதாளம்

அங் உரு குரு சேகரம் அக் 10 தா வடி இரண்டு திருதசேகரம்
ஆகு பேத 512 மாத் $2\frac{1}{2}$ இரண்டு திருதம் கா. பேத 105

[1] மூன்றெழுத்துச் சாதியட தாள மொழியக்கேள்
[2] தோன்றுபிறை [3] வட்டத் துவயமொடு—தோன்றும்
[4] உபயமதி மாத்திரையி ரண்டவை யுற்ற
[5] அபயவக் கரம்பத் [6] தறி. ௭

---

1 ஆடும் பெருமான். கூத்துக்கிறைவன். 2 அருள்—கிருபை 3 அறுகால்—ஒன்றரை. 4 ஆறக்கரம்—ஆறெழுத்து. 4 சுழிகால்—திருத சேகரம். 6 மறுமுறைகால்—அநுத்ருதம். 7 வட்டம்—திருதம். 8 மதி—வரையறு.

1 வட்டம் திகழ்கால்—திருதத்தின்மீது விளங்குகின்ற அநுத்ருதம் அது திருதசேகரம் எனப்படும். 2 தொடருதல்—பின்பற்றுதல். 3 ஏழ்கால்—ஒன்றேமுக்கால். 4 நுழைதல்—புகுதல்.

1 மூன்றெழுத்துச்சாதி—திரிசிரசாதி. 2 தோன்றுபிறை—உதிக்கின்ற மூன்றாம்பிறைச் சந்திரன். 3 வட்டத்துவயம்—இரண்டு வட்டம். 4 உபயமதி—இரண்டு திருதம். 5 அபயவக்கரம்பத்து—பயமற்ற எழுத்துப்பத்து. 6 அறி—உணர்.

திரி-ஏகதாளம்

அங் உரு திருத சேகரம் அக் 3 தா வடி திருதா நுதிருதம்
ஆரு பேத 4 மாத் $\frac{4}{3}$ காணுபேத 1

திரிசிரவே கத்தாளம் தேர்முக்கால் மாத்ரை
துரித விராமம் தொடரக்—கரமே
[1]அரகரவென் பாருக் கருள்புரியுஞ் [2]செய்ய
கரசிவனர் [3]கண்ணை யெண்ணிக் காண். எ

மூன்றுவது
மிசிரசாதி-துருவதாளம்

அங் உரு காகபாத எருதிருத சேகரம் அக் 23 தா வடி லகுதிருத சேகரம் திருதம் இருலகுதிருத சேகரம்
ஆரு. பேத மாத் 5 $\frac{4}{3}$ காணு பேத 33,089 41,940,64.

[1]மூன்றொடுநா லேந்தக்ரமாத்ரையஞ்சே முக்காலே
தோன்று மிசிர துருவத்துக்—[2]கேன்றவில
குத்துரித சேகரமே கொம்பொ டிரண்டில
குத்துரித சேகரமே [3]கொள்.

மிசி-மட்டயதாளம்

அங் உரு காகபாதம் அக் 16 தா வடி லகுதிருத சேகரம்
ஆரு பேத 32,768 மாத் 4 திருதம் லகு திருதசேகரம்
கா. பேத 321

[1]மார்க்கண்ட மாமுனிக்கு வாய்த்தவய தக்கரமே
[2]கார்க்கண்டன் ஏறேறின் கால்மாத்ரை—[3]ஆர்க்கும்

---

1 அரகர—சிவசிவ எனப்பொருள்படும் ஓர் அடுக்குமொழி 2 செய்ய கரசிவனர்—சிவந்த கைகளையுடைய சங்கரர். 3 கண்ணை யெண்ணிக்காண்—கண்களைக் கணக்கிட்டுக் கண்டால் அவை மூன்றாகும். (சோமன், சூரியன், அக்னி.)

1 மூன்றோடு நாலேந்தக்கரம்—இருபத்திமூன்றெண். 2 என்றல்—இயைய. 3 கொள்—அங்கீகரி.

[4] இணையில குத்துரித [5] விந்து விடைகண்
[6] அணைம்சிர மட்டய மாம். உ

மிசி-ரூபகதாளம்

அங் உரு குரு சேகரம் அக் 9 தா வடி நிருதம் லகுநிருத
ஆகு பேத 256 மாத் $2\frac{1}{4}$ சேகரம் கா. பேத 3

[1] கிரகமக்ர மாத்திரைதான் கேளிரண் டேகால்
துரித [2] மிலகு த்ரித—விரதி
மிசிரகுல ரூபக தாள மிதனை
[3] அசிரதை செய்யா தறி. ங

மிசி-சம்பைதாளம்

அங் உரு குரு நிருதம் அக் 10 தா வடி லகுநிருத சேகரம்
ஆகு பேத 512 மாத் $2\frac{1}{2}$ அநுநிருதம் நிருதம்
கா. பேத 193

பத்தக்ர மாத்ரையதிற் பாதியிற் பாதியே
சுத்தமிசி ரச்சாதி சொல்சம்பை—[1] வித்தகக்
[2] கோறுரித மேல் [3] விந்து [4] கோடுமதி [5] கூடுமதி
மாறுபடா வண்ண மதி. ச

---

1 மார்க்கண்டமாமுனிக்கு வாய்த்த வயதக்கரம்—சிரஞ்சீவியாகிய மார்க்கண்டேயருக்குப் பொருந்திய ஆபுளின் எண் பதினாறு. 2 கார்க்கண்டன்—மைநிறக்கழுத்தை யுடைய சிவபெருமான். ஏறேறின் கால்—அவர் ஊர்ந்தருளுகின்ற ரிஷபத்தின் கால்கள் நான்கு. 3 ஆர்க்க—ஒலிக்க. 4 இணையிலகுத் துரிதம்—இரண்டுலகுநிருத சேகரம். 5 விந்து இடைக்கண்—நடுவில் ஓர் துரிதம் 6 அணைதல்—சேர்தல்.

1 கிரகமக்ரம்—நவக்கிரகத்தின் எண் அது ஒன்பது. 2 லகு துரிதவிரதி—லகுத்ருதசேகரம். 3 அசிரதை—சிரத்தையின்மை. வடசொல்.

1 வித்தகம்—ஞானம். 2 கோறுரிதம்—லகுத்ருதம். 3 விந்து—அநுத்ருதம். 4 கோடுமதி—வளைந்தபிறை, அது அநுத்ருதம். 5 கூடுமதி—பூர்ண சந்திரன், அது திருதம்.

மிசி-திரிபுடைதாளம்

அங் உரு குரு திருத சேகரம் அக் 11 தாவடி லகுதிருத சேகரம்
ஆரு பேத 1024 மாத் $2\frac{4}{3}$ இரண்டு திருதம்
கா. பேதம் 321

இரண்டேழுக் கால்மாத்ரை [1]என்னுருத்ர ரக்ரம்
[2]சரஞ்சக் கரம்விரதி தன்னே—டிரண்டு
துரித மிசிர திரிபுடைக்குச் சொற்ருர்
அரிதிற் புலவ ரறிந்து.

மிசி-அடதாளம்

அங் உரு காகபாத திருதம் அக் 18 தாவடி இரண்டு லகு திருத
ஆரு பேத 131072 மாத் $4\frac{1}{2}$ சேகரம் இரண்டு திருதம்
கா. பேத 41,025

[1]கந்தன் கரசிரமே காணக் கரமாத்ரை
[2]அந்தமிகு நாலரை யாகுமே—வந்த
சரந்துரித விந்திரண்டே சக்ரமிரண் டேமி
சிரவடதா ளத்தின் சிறப்பு. சு

மிசி-ஏகதாளம்

அங் உரு லகுதிருதசேகரம் அக் 7 தாவடி லகு திருத சேகரம்
ஆரு பேத 64 மாத் $\frac{4}{3}$ காணு பேத 1

[1]சுரமக் கரமாத்ரை தோன்றென்றே முக்கால்
[2]சரந்துரித விந்தங்கஞ் [3]சார்மி—சிரவேக
தாளமறி வாய்நெஞ்சே! [4]சந்ததமு நம்மை
[5]ஆளு முருகனரு ளால் எ

---

1 என்னுருத்திரர்—என்னுகின்ற உருத்திரர் பதினொருவர். 2 சரஞ்சக்கரம்விரதி—சரம், லகு, சக்கரம், திருதம், விரதி, அநுத்ருதம் இவை லகுத்ருதவிராமத்தைக் குறிப்பன.

1 கந்தன் கரசிரமே காணக்கரம்—சிவகுமாரனுகிய அறுமுகவனுக்குத் திருக்கைகள் பன்னிரண்டும், திருத்தலைகள் ஆறும் ஆகப்பதினெட்டுறப்புக்கள். 2 அந்தமிகு—மிகுதியான அழகு.

1 சரம்—ஏழு சுரம். அவை ச. ரி. க. ம. ப. த. நி. என்பன. 2 சரந்துரிதவிந்து—லகுதிருதவிராமம் 3 சார்—பக்கம் 4 சந்ததம்—எப்போதும். 5 ஆளும் முருகன்—ஆண்டருள்கின்ற அறுமுகத் திறைவர்.

நான்காவது
கண்டசாதி-துருவதாளம்

அங் உரு காகபாத அக் 17 தாவடி லகுசேகரம் திருதம்
அநுதிருதம் மாத் 4 $\frac{1}{4}$ இரண்டுலகு சேகரம்
ஆகு. பேத 65,536 கா. பேத 2129

கண்டதுரு வத்துக்குக் கண்டவக்க ரம்பதினேழ்
[1] விண்டநா லேகால் [2] விரிமாத்ரை—கொண்ட
[3] லகுவிரா மங்[4] கண் [5] லகுவிரா மம்பின்
லகுவிரா மம்மென லாம். க

கண்-மட்டயதாளம்

அங் உருபுளுதம் அக் 12 தா வடி லகுசேகரம்
ஆகு பேத 2048 மாத் 3 திருதம் லகுசேகரம்
கா. பேத 81

கண்டமட்ட யத்தக்ரங் [1] க்ந்தன் கரமலரே
[2] அண்டர் உரைமாத்ரை [3] ஆறரையே—[3] தண்டவிரா
மத்திரண்டின் மத்தியிலே வைத்த ஒருதுரிதம்
[4] சித்திமுத்தி செய்யுமிது தேர். உ

கண்-ரூபகதாளம்

அங் உரு லகுதிருத சேகரம் அக் 7 தா வடி திருதம்
ஆகு பேத 64 மாத் 1 $\frac{4}{3}$ லகுசேகரம் கா. பேத 3

[1] கொங்கிற்றே வாரப்பா கொண்டதல மக்கரமே
[2] பொங்குமொன்றே முக்கால் புகழ்மாத்ரை—
சங்கையறக்

---

1 விண்ட—சொன்ன. 2 விரி—விரிந்த, 3 லகுவிராமம்—லகு சேகரம், 4 கண்—திருதம் 5 லகுவிராமம்பின்—பின்னும் லகுசேகரம்.

1 கந்தன் கரமலர்—முருகப்பிரானுடைய திருக்கரங்கள் பன்னிரண்டு. 2 ஆறரை—மூன்று. 3 தண்டவிராமம்—லகுசேகரம். 4 சித்தி முத்தி—சித்தி கை கூடுதலும்—முத்தி பிறப்பு நீங்குதலும் செய்விக்கும்.

கண்ட குலரூப கத்துக் கொருதுரிதம்
விண்டலகு விந்தொன்று மே. ௩

கண்-சம்பைதாளம்

அங் உரு குரு	அக் 8	தா வடி லகு சேகரம்
ஆரு பேத 128	மாத் 2 அநு திருதம் திருதம்	கா பேத 49

[1] சிவபெருமான் வீரம் செலுத்துதல மக்ரம்
[2] அவனுருவ மாத்திரை ஆகும்—தவமுயல்வார்
கண்டகண்ட சம்பை கருதிலகு சேகரம்
விண்டதுடி வட்டம் விளம்பு. ௪

கண்-திரிபுடைதாளம்

அங் உரு குரு சேகரம்	அக் 9	: தா வடி லகு சேகரம்
ஆரு பேத 256	மாத் $2\frac{1}{4}$	இரண்டு திருதம் கா. பே. 81

[1] மணிபக் கரமாகு மாத்ரையிரண் டேகால்
[2] கனியம்பு சேகரமுங் [3] கண்கண்—துணிகண்ட
சாதி திரிபுடையே [4] சாம வுபவேத
மோதி யுணர வுலகு. ௫

---

1 கொங்கிற் றேவாரப்பா கொண்டதலம்—கொங்குநாட்டில் தேவாரப்பாடல்கள் பெற்ற திருத்தலங்கள் எழு. அவை, அவிநாசி, திருமுருகன் பூண்டி, திருநணா, கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செக்கோடு) திருப்பாண்டிக் கொடுமுடி, கரூர், வெஞ்சமாக் கூடல் என்பன. 2 பொங்கும்—மிகுதிப்படும். 3 சங்கையற—சந்தேகந் தெளிய.

1 சிவ பெருமான் வீரம் செலுத்துதலம்—அவை அட்ட வீரட்டானம். அத்தலங்கள்—திருக்கோவலூர், திருவதிகை, திருக்குறுக்கை, திருவழுவூர், திருக்கண்டியூர். திருப்பறியலூர். திருக்கடவூர், திருவிற்குடி என்பன 2 அவனுருவம்—இரண்டு, அவை. அர்த்தநாரி எனப் பெயர் பெறும். அர்த்தம்—பாதி; நாரி—பெண்.

1 மணியக்கரம்—நவமணி ஒன்பது. அவை கோமேதகம், நீலம், பவளம், புருடராகம், மரகதம், மாணிக்கம். முத்து, வயிரம், வைடூரியம் என்பன. 2 கனியம்பு—எண்ணுகின்ற லகு, அது ஒன்று. 3 கண்கண்—இரண்டுதிருதம் 4 சாமவேதத்தினது உபவேதம்—காந்தருவம் அதிற் கூறப்பட்டதே பரதம்.

கண்-அடதாளம்

அங் உரு புளுத திருதம் அக் 14 தா வடி இரண்டு லகு சேகரம்
ஆகு பேத 8192 மாத் $3\frac{1}{2}$ இரண்டு திருதம். கா பேத 2577

அக்க[1]ரமீ ரே[2]ழே ழரை மாத்ரை யங்கமிரு
தக்கலகு சேகரம் [3]தாவுசுடர்ச்—சக்கரமும்
அத்தொகையே கண்ட அடதாள மாமிதனை
நித்த மனமே! நினை. சு

கண்-ஏகதாளம்

அங் உரு லகுசேகரம் அக் 5 தா வடி லகு சேகரம்
ஆகு பேத 16 மாத் $7\frac{1}{4}$ கா பேத 1

கண்ட குலவேக தாளங் கழறக்கேள்
[1]தண்டுமுடி மேற்றடியைத் தாங்குமே—கண்டுகொள்
[2]அம்பலத்தான் [3]ஆடுசெயல் அக்கர[4]மைங் கால் மாத்ரை
[5]கும்பமுனி சொன்னான் குறித்து. எ

ஐந்தாவது

சங்கீர்ணசாதி துருவதாளம்

அங் உரு காகபாத அக் 29 தா வடி குரு சேகரம்
புளுத சேகரம் மாத் $7\frac{1}{4}$ திருதம் இரண்டு குரு சேகரம்
ஆகுபேத 26,84,20096 கா பேத 5,25,569

[1]குருவிந்து [2]வட்டம் [3]குருவிந் திரட்டி
[4]துருவஞ்சங் கீரணமே தோன்றும்—[5]இருபதொ டொன்

---

1 ஈரேழ்—பதினான்கு. 2 ஏழரை—மூன்றரை. 3 தாவு சுடர்ச் சக்கரம்—வலிமையும் ஒளியும் உடைய வட்டம். அது திருதம்

1 தண்டு முடிமேற்றடி—லகுவின்தலை மீது அநுத்ருதம், அது லகுசேகரம் எனப்படும். 2 அம்பலத்தான்—பொற்சபையில் நடிக்கும் கூத்தப்பெருமான். 3 ஆடு செயலக்கரம்—அவன் நடிக்கின்ற காரிய வெண்ணைந்து—அவை, சிருட்டி, திதி, சம்மாரம், திரோபவம், அநுக்கிரகம் என்பன. 4 ஐங்கால்—ஒன்றே கால் 5 கும்பமுனி—அகத்தியர் இவையே பஞ்சகிருத்தியம் எனப்படும்.

பானக் கரமாத்ரை பாடிய வேழேகால்
[6]ஞானக் குரவருரை [7]நாடு. க

சங்-மட்டயதாளம்

அங் உரு காகபாத ஏகு அக் 20 தா வடி குரு சேகரம்
ஆரு பேத 5,24,288 மாத் 5 திருதம். குருசேகரம்
கானு பேத 1281

குருவிந்து வட்டம் குருவிந்து வக்ரம்
இருபது மாத்ரை [1]இயையை—வருவது
சங்கி ரணமட் டயதாளம் [2]சாமத்தின்
[3]இங்கி தமான [4]இசைப்பு. உ

சங்-ரூபகதாளம்

அங் உரு குரு திருத சேகரம் அக் 11 தா வடி திருதம்
ஆரு பேத 1024 $2\frac{4}{3}$ மாத் குரு சேகரம் கா பேத 3

சங்கர ஞர்வகுத்த சங்கர ரூபகம்
அங்கம்வட் டங்குருவிந் தாகுமே—இங்கிதற்கே
அக்கரம் [1]ஐந்தோடா றுகுமே—மாத்திரை
தக்க[2]முக்கா லோடிரண்டு தான். ங

---

1 குருவிந்து—குருசேகரம் 2 வட்டம்—திருதம். 3 குருவிந் திரட்டி—இரண்டு சேகரம். 4 துருவசங்கீரணம்—சங்கீரணசாதி துருவதாளம் 5 இருபதோடொன்பான் அக்கரம்—இருபத் தொன் பது அட்சரம். 6 ஞானக்குரவர்—நந்திச்சுரர், அகத்திய முனிவர். முதலிய பரதநூலாசிரியர்கள். நாடு—நினை.

1 இயை—இணங்கு. 2 சாமம்—சாமவேதம் 3 இங்கிதம்—இனிமை, இக்கிதம் என்பது, எதுகை நோக்கி இங்கிதமென நீட்டல் விகாரம் பெற்றது. 4 இசைப்பு—இணக்கம்.

1 ஐந்தோடாறு—பதினொன்று. உடனிகழ்ச்சிப் பொருள் 2 முக்காலோடிரண்டு—இரண்டேமுக்கால்.

சங்-சபைதாளம்

அங் உரு புளுதம் அக் 12 தா வடி நிருத சேகரம்
ஆகு பேத 2048 மாத் 3 அநு நிருதம் நிருதம் கா பேத 769

[1] கங்கை முடியான் கரைசங் கரசம்பை
அங்கங் குருவிந் தனுதரிதம்—[2] திங்களுக்கே
அக்கரம் பன்னிரண் [3] டாறரை மாத்திரை
[4] இக்கினுந்தித் திக்கு மிசைப்பு. சா

சங்-திரிபுடைதாளம்

அங் உரு புளுத சேகரம் அக் 13 தா வடி குரு சேகரம்
ஆகு பேத 4096 மாத் $3\frac{1}{4}$ இரண்டு நிருதம் கா பேத 1281

[1] மூன்றொடுபத் தக்கரம் [2] மூன்றொடுகால் மாத்திரை
தோன்றுகுரு விந்து சுழியிரண்டே—[3] ஆன்றசங்
கிரண சாதித் திரிபுடை [4] கேடகற்றும்
[5] ஆரண வாய்மை [6] அமைப்பு. ரு

சங்-அடதாளம்

அங் உரு காகபாத லகு சேகரம். அக் 22 தா வடி இரண்டு குரு
மாத் $5\frac{1}{2}$ சேகரம் இரண்டு நிருதம்
ஆகு பேத 20,970,32 கா பேத 6,5151,617

அஞ்சரை மாத்திரை [1] நா லஞ்சரை யக்கரம்
[2] தஞ்சகுரு விந்து [3] கொம்பு சாரிரண்டே—[4] எஞ்சிய
அஞ்சா வதுசாதி ஆரு வதுதாளம்
[5] பஞ்சாக் கரனமைத்த பண்பு. சா

சங்-ஏகதாளம்

அங் உரு குரு அநுத்ருதம் அக் 9 தா வடிகுரு சேகரம்
ஆகு பேத 256 மாத் $2\frac{1}{4}$ கா பேத 1

[1] சாதியந்தம் [2] தாளவந்தம் சாற்றொன்ப தக்கரமே
ஓதிய [3] மாத்திரைக்கா லொன்பதே—[4] நாத

குருசேகரமங்கம் கூறியவிந் நன்னூல்
முருக னருளால் முடிவு. எ

வாழி

தாளம் நீடுழிவாழி சாற்று தண்டமிழும் வாழி
நீளுமா காலமாதி பத்துயிர் நித்தம் வாழி
நாளுமே கற்போர் வாழி நாடுவோர் நவில்வோர் வாழி
ஆளரன் உமைகுமாரர் அடியவர் அகிலம்வாழி

தாளதர்ப்பணம் முற்றிற்று.

---

1 கங்கை முடியான் கரை—கங்கையைத்திருமுடியில் தரித்த சிவபெருமான் கூறிய. 2 திங்கள்—திருதம் 3 ஆறரை—மூன்று. 4 இக்கு—கரும்பு.

1 மூன்றொடுபத்தக்கரம்—பதின்மூன்று அட்சரம் 2 மூன்றொடுகால்—மூக்றேகால். 3 ஆன்ற சங்கிரணம், விசாலமான சங்கீரணசாதி. 4 கேடகற்றும்—தீமையை நீக்கும். 5 ஆரணவாய்மை —வேதத்தின் உண்மை.

1 நாலஞ்சரையக்கரம்—நாலைந்து இருபது; நாலரை இரண்டு ஆக இருபத்திரண்டு எண். 2 தஞ்சகுருவிந்து—பெருமையுள்ள குருவின்மீது அநுத்ருதம். 3 கொம்பு சாரிரண்டே— இரண்டுதிருதம்; கொம்பு திருதம்; சார்தல், நெருங்குதல். 4 எஞ்சிய—மீந்த 5 அஞ்சாவது சாதி—சங்கீரணம். 6 ஆறாவது தாளம்—அடதாளம். 7 பஞ்சாக்கரன் அமைத்த பண்பு—சிவபெருமான் நியமித்தவிதம்.

1 சாதியந்தம்—ஐந்துசாதிகளில் சங்கீரணம் கடைசியானது 2 தாளவந்தம்—எழுதாளங்களில் ஏகதாளம் இறுதியானது. 3 மாத்திரைக்கால் ஒன்பதே—இரண்டேகால் மாத்திரை. 4 நாதகுரு சேகரம் அங்கம்—ஓசையுடைய குருவிராமம் உறுப்பாகவுடையது.

முப்பத்தைந்து தாளங்களில் ஒரே எண் பெற்ற தாளங்கள் இன்னின்ன வென்பதை விவரிக்கும் பட்டிகை.

(5) ஐந்து அக்கரங்களுடைய தாளங்கள் இரண்டு. அவை—திரிசிரசாதி ஏகதாளம், கண்டசாதி ஏகதாளங்கள்.

(6) ஆறு அக்கரங்களுடைய தாளங்கள் இரண்டு. அவை—சதுரசிரசாதி ரூபகம், திரிசிரசாதி சம்பை தாளங்கள்.

(7) ஏழு அக்கரங்களுடைய தாளங்கள் நான்கு. அவை—சதுரசிரசாதி சம்பை, திரிசிரசாதி திரிபுடை, மிசிர சாதி ஏகம், கண்டசாதி ரூபக தாளங்கள்.

(8) எட்டு அக்கரங்களுடைய தாளங்கள் மூன்று. அவை-சதுரசிரசாதி திரிபுடை, கண்டசாதி சம்பை, திரிசிரசாதி மட்டய தாளங்கள்.

(9) ஒன்பது அக்கரங்களுடைய தாளங்கள் மூன்று. அவை—மிசிரசாதி ரூபகம், சங்கீரணசாதி ஏகம், கண்டசாதி திரிபுடை தாளங்கள்.

(10) பத்து அக்கரங்ளுடைய தாளங்கள் மூன்று. அவை—சதுரசிரசாதி மட்டயம், திரிசிரசாதி அடதாளம், மிசிர சாதி சம்பை தாளங்கள்.

(11) பதினொரு அக்கரங்களுடைய தாளங்கள் மூன்று. அவை—திரிசிரசாதி துருவம், மிசிரசாதி திரிபுடை, சங்கீரண சாதி ரூபக தாளங்கள்.

(12) பன்னிரண்டு அக்கரங்களுடைய தாளங்கள் மூன்று அவை—சதுரசிரசாதி அடதாளம், கண்டசாதி மட்டயம், சங்கீரணசாதி சம்பை தாளங்கள்.

(14) பதினான்கு அக்கரங்களுடைய தாளங்கள் இரண்டு அவை—சதுரசிரசாதி துருவம், கண்டசாதி அட தாளங்கள் ஆக தாளங்கள் இருபத்தி ஐந்து.

எஞ்சிய திரிசிரசாதி ஏகதாளம் (3) சதுரசிரசாதி ஏகதாளம் (4) சங்கீரணசாதி திரிபுடை (13) மிசிரசாதி மட்டயம் (16) கண்டசாதி துருவம் (17) மிசிரசாதி அடதாளம் (18) சங்கீரண சாதி மட்டயம் (20) சங்கீரணசாதி அடதாளம் (22) மிசிரசாதி துருவம் (23) சங்கீரணசாதி துருவம் (29) ஆகிய தாளங்கள் பத்தும் ஒவ்வோர் எண்ணையுடையவை.

செய்யுள் முதற் குறிப்பு அகராதி



விளம்பரம்

நூற்றெட்டுத் தாளக் கலிவெண்பா.

(இதுவரையில் தமிழில் வெளிவராத இனிய நூல்)

"நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பாவும், நூற்றெட்டு மாத்திரைத் தாளம்வெண்பா அந்தாதியும்," என்ற மார்க்க தாள நூலொன்று அச்சேறியிருக்கிறது. விலைக்குத் தயார். காலஞ்சென்ற இந்நூலாசிரியர், மைசூர் சமஸ்தானத்தாரால் நன்குமதிக்கப்பெற்று அச்சமஸ்தான ஆடலாசிரியராகப் புகழ் பெருக விளங்கி யிருந்தவர். வடமொழி, தென்மொழிகளில் புலமை சிறந்தவர். இந்நூலில் நூற்றெட்டுத் தாளங்கள் ஏற்பட்டதன் விவரம், மாத்திரை, தாள இலக்கணம், அங்க விவரம், தாளம் போடும் விதம். மற்றும் அரிய பெரிய இனிய விஷயங்களைக் கற்பவர்கட்குப் பெரிதும் இன்பம் எய்தும்படி அழகுபெறக் கோக்கப் பெற்றிருக்கின்றன. நூற்றெட்டுத் தாளங்கள் பெரும்பகுதி வடமொழியிலும் தெலுங்கு பாஷையிலும் அச்சேறி வருகிறதேயன்றி, தாய் மொழியாகிய தமிழில் வெளிவருவதே யில்லை. இந்நூல்தான் தமிழ் மொழியில் முதன்முதலாகத் தென்னாட்டுத் தமிழர்கள் கண்டு மகிழும்படி அருமையான விஷயங்களுடன் அழகாக வெளிவருகிறது. சங்கீத லயஞான வித்துவான்கட்கு நல்விருந்தாக மிளிரும் இதனை ஒவ்வொருவரும் பெற்று இன்புறும்படி கோருகிறன். இதன் விலை அணா 0—8—0

பத்தணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு பிரதி தபாலில் அனுப்பப்படும்.

விலாசம்

சி. கு. நாராயணசாமி முதலியார்,

பேரூர் P. O.,

(Via) கோயமுத்தூர்.

ளங் கற்கு முறையும்-சிறப்பு வகையும்

(அருமை-பெருமைகள் நிரம்பிய இனிய நூல்)

தென்னாட்டில் பெயர் சிறந்த மத்தள வித்துவானால் இயற்றப்பெற்றது.

இன்னிசைக் கருவிகளில் தலை சிறந்த தோற்கருவியே 'மத்தளம்' என்பது. இதனை, சிலப்பதிகார நூலாசிரியர், 'தண்ணுமை' யெனக் கூறியுள்ளனர். இதன் மகிமை அளவிடற்கரியது.

இத்தகைய மிருதங்க சாத்திரத்தை நன்கு கற்றுணராத சிலர் அப்பெயரால் நூல்கள் வெளியிட்டிருக்கின்றனர், அவற்றில்மத்தளங்கற்கவிரும்புவோர்களின் இச்சையை நிறைவேற்றவும், அதன் உயரிய அருமை பெருமைகளை அறிந்தின்புறவும் செய்யாமல், வேற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், என்னும் குற்றங்கள் மலியும்படி செய்திருக்கின்றனர். இத்தகையகுற்றங்களுக்கு இடமில்லாமல் அச்சாத்திரத்தை நன்கு ஆராய்ந்து 'சர்வவாத்திய சங்கிரகம்' சோடசவாத்தியலட்சணம் டமருப்பிரகாசிகை, உமாபரதம் அநுமபரதம், நந்திபரதம் அகத்தியபரதம், அபியநயதர்ப்பணம், கீதவாத்தியநடனரஞ்சினி, சுத்தானந்தப்பிரகாசம், சிலப்பதிகாரம், ஆகியநூல்களில் மத்தளத்தைப்பற்றிக் கூறும் இனியபகுதிகளை ஆராய்ந்தெடுத்துக் கற்பவர்களுக்குப் பெரிதும் பயனுண்டாகும்படி அழகுபெறத்திறட்டி எழுதப்பெற்றிருக்கிறது.

அல்லாமல், நூதனமாக நாகபந்தாதி கிருதிஅஸ்தபாடங்களில், சமபாணி, அவகார்தம், உத்புல்லம், கலகம், பாணியாந்திரம், தண்டஹஸ்தம், யுகம், ரகஹஸ்தம், பிண்டஹஸ்தம், ஊர்த்துவம், சாம்பிராந்தம், குந்தம், அவகடம், விஷமஅந்தாரி, என்னும் பகுதிகளில் விளங்கும் மத்தளபாடங்களை மத்தளங் கற்பவர்கட்குப் பிரயோசனமாகும்படி சேர்க்கப்பெற்றிருக்கின்றன. எளிய இனியதமிழ்நடையில் அமைந்தது. மற்றும், இதில் மத்தள உற்பத்தி, அமைப்பு, பாடங்கற்குமுறை, மத்தளச்சிறப்பு, முதலியவைகளை உடன் சேர்த்தும், கற்போர் மனதில் வியப்பு, உற்சாகம், அற்புதம், ஆகிய வற்றை எழும்படி நெடுநாள் சிரமப்பட்டு எழுதப் பெற்றது, ஆனதால், ஒவ்வொருவரும் இப் புத்தகத்தைப் பெறமுந்துவார்களாக.

புத்தகத்தின் விலை ரூபா 1—0—0

சி. கு. நாராயணசாமி முதலியார்,

பேரூர், P. O., (Via) கோயமுத்தூர்.